CHARTERED ACCOUNTANCY
CAB II
ENGLISH MEDIUM
STARTED ON
09.02.2013
VEAL BUSINESS COLLEGE
ADMISSION STILL OPEN
CONTACT : 0777 555 738

பங்குனி மாதம் 31ம் திகதி
April 13, 2013
# மலைமுரசு®
MALAIMURASU
அறைவு 01 இயம் 38
உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்
விலை – 20.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# அனைத்துப் பாடத்திலும் அதி விசேட சித்திகளை பெற்றுக்கொண்டது சாம்பல்த்தீவு மகாவித்தியாலயம்

# மாணவி பிரபாகரன் சப்தவி சாதனை!!!



சப்தவி

சாம்பல்தீவிலேயே கல்விகற்று கல்விப் பொதுத்தாரதரப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் விசேட சித்திகளைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார் சாம்பல்த்தீவு மாணவி பிரபாகரன் சப்தவி. இப்பாடசாலையின் வரலாற்றில் முதலாவது அனைத்துப்பாட விசேட சித்தி இவ்வாண்டிலேயே பெறப்பட்டிருப்பது ஓர் வரலாற்றுப் பதிவாக உள்ளது. அத்துடன் இரட்டையர்களான நகுலேஸ்வரன் விதூசனா மற்றும் நகுலேஸ்வரன் வினுசிதா ஆகிய இருவரும் முறையே ஏழு அதிவிசேட சித்திகளையும் ஒரு விசேட சித்தியையும் ஒரு சாதாரண சித்தியையும் பெற்றுக்கொண்டுள்ள்னர். தேவராசா கயாழினி ஆறு அதிவிசேட சித்திகளையும் சேதுபாண்டி.. 7

## எமது சக இனத்தவர் துன்பப்படுவது எமக்கும் வலியைத் தருகின்றது

– சம்பந்தன்



"முஸ்லிம் மக்கள் இந் நாட்டில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருபவர்கள். அத்துடன் இந் நாட்டின் அபிவிருத்திக்காய் மிகவும் முயற்சியுடன் செயற்படுபவர்கள். அவர்களுக்-கென்றோர் உன்னதமான பாரம்பரியம் உண்டு. அதன் வழி அவர்களது பழக்கவழக்கங்கள், உடைகள், உணவு மற்றும் உயர்ந்த சமய ஆசாரங்கள் உண்டு. ஆனால் அவர்களுக்கு எதிராக தற்போது வெறுக்கத்தக்க கசப்பான அருவருப்பான, எதிர்ப்பு நடவடிக்கைகள் இந்நாட்டில் கட்டவிழ்த்து .. 7

## மின் உற்பத்தியைக் குறைக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள மின்சார சபை மின்தடைக்கொடுமையை அனுபவிக்க நேரிடுமா?

எரிபொருட் செலவின் சுமை தாங்கமுடியாத அளவிற்கு உள்ளதால் அனல் மின் உற்பத்தியைக் குறைக்கும்படி நாம் நிர்ப்பந்திக்கப்-பட்டுள்ளோம் என்று இலங்கை மின்சாரசபைத் தலைவர் தெரிவித்-துள்ளார். நாளொன்றிற்கு சுமார் 15 மில்லியன் ரூபாய்கள் இ.மி.ச நட்டமடைவதாகத் தெரிவித்துள்ள அவர் கரவல்பிட்டியா வில் உள்ள அனல் மின்பிறப்பாக்கிகள் கடந்தவாரமும் செயற்படுத்தப்படாமல்.. 7

## சம்பூர் பிரதேச மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு

"திருகோணமலை, சம்பூர் பிரதேச மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை வழங்க கிழக்கு மாகாண சபை ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கும்" என்று அமைச்சரவை பேச்சாளரும் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார். இது குறித்து தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர், "பல்வேறு தரப்பினராலும் காலத்துக்கு காலம் சம்பூர் மக்களின் பிரச்னை குறித்து பேசப்பட்டு வருகின்றது. 7

## தென்னாசிய அமைதிக்கு இலங்கை நல்லிணக்கம் நோக்கி நகர வேண்டும்

– அமெரிக்க பசுபிக் தளபதி – 7

# குச்சவெளியில் அரச காணியை தனியார் நிறுவனத்திற்கு வழங்கத் தீர்மானம்

## கிழக்கின் அமைச்சரவை அனுமதி

அரச காணியை தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்க கிழக்கு மாகாண அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. சுமர் 0.4805 ஹெக்டெயர் காணியை அமன்தா பீச் ரிசோட் எனும் தனியார் நிறுவனத்திற்கு வழங்க கிழக்கு மாகாண அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.இதனால் நீண்ட கால வரி வழங்கல் அடிப்படையில் குச்சவெளி பிரதேசத்திலுள்ள அரச காணியொன்றே அமன்தா பீச் ரிசோட் தனியார் நிறுவனத்திற்கு வழப்பட-வுள்ளது. இந்த காணி 99 வருட குத்தகை அடிப்படையிலேயே வழங்கப்-பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த காணி வழங்கல் தொடர்பில் மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவினால் அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பாக ஆராய்ந்த அமைச்சரவை, 13ஆம் திருத்தச் சட்டத்திற்கு அமைய நீண்ட கால வரி வழங்கல் அடிப்படையில் காணியை வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்த அறிவிப்பினை கிழக்கு மாகாண அமைச்சரவை பேச்சாளரான எம்.எஸ். உதுமான் லெப்பை தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு

159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

**வணக்கம் !**

## மென் மன உணர்வும் மன உறுதியும்!!!

கடந்தவாரம் மென்மன உணர்வுகளைப் பற்றிப் பேசியிருந்தேன். தொலைபேசியழைப் பொன்றில் தாயொருவர் மென்மன உணர்வுகளால் குழந்தைகளின் மனவுறுதி பாதிக்கப்படுமா எனக் கேள்வியெழுப்பினார்.

மென்மனஉணர்வு என்பது உண்மையில் மனவுறுதியின் ஓர் வெளிப்பாடே! மென் மனஉணர்வுகள் உள்ளவர்களால் மட்டுமே தமது மனத்தை உறுதியாக வைத்திருக்க முடியும். அவர்களால் மட்டுமே இவ்வுலகில் மனிதர்களாக வாழமுடியும்.

மனிதர்களாக வாழ்தல் என்பது இரண்டு முக்கிய விடயங்களைச் சுட்டு நிற்கின்றது. இரக்கம், நியாயமானதின் பின் நிற்றல் ஆகிய இரண்டுமே அவை. இரக்கம் என்பது மென்மனஉணர்வு. நியாயத்தின் பின் நிற்றல் என்பது மனஉறுதி. இரக்கம் இருப்பவனால் மட்டுமே அக்கணத்தில் எது நியாயம் என்பதை மனித உணர்வுகளுடன் புரிந்துகொள்ள முடியும். அவ்வாறு புரிந்துகொண்ட நியாயத்தின் பின்னாள் அவனால் போக முடிவதற்கு அவனுக்கு உதவி செய்வது அவனது மனஉறுதியே!

தடுப்பிலிருந்த போராளி ஒருவரை விசாரணை செய்த புலனாய்வு அதிகாரி ஏன் நீங்கள் போராளியாக மாறினீர்கள் என்று கேட்ட போது அப் போராளி அளித்த பதில் நான் சிறுவனாய் இருந்த போது என் கண்முன்னே விமானக் குண்டு வீச்சில் குழந்தைகள் சிதறிச் செத்ததைக் கண்டேன் அன்றிலிருந்து போராளி யாகிவிட்டேன் என்றார். சரி ஏன் இவ்வளவு நாட்களும் போராளியாகவே இருந்தீர்கள் எனக் கேட்ட போது என் கண் முன்னே எவருடைய குழந்தையும் இனிச் சாவதை அனுமதிக்கப் போவதில்லை என்று எடுத்த தீமானத்தால்தான் நான் அவ்வாறு இருந்தேன் என்று!

இப்போது தெரிகின்றதா? மென்மன உணர்வின் போக்கின் பால் உறுதியாகும் மனத்தை.......!

மனஉறுதியின் அடிப்படையே மென்மன உணர்வுகள்தான் என்பதை ஏற்றுக் கொள்கின்றீர்களா?

இறுதியாக உலகவிடுதலைப் போராளி சே - சேகுவேராவின் இறுதிக் கணத்தை நாம் நினைவு கொள்வோம்.

பொலிவிய மக்களுக்காகப் போராடிய அந்த ஆர்ஜன்டீன வீரர் கால்களிலும் கைகளிலும் சூடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்டு பொலிவியாவில் ரோட்ரிக்கியூப்ஸ் என்னும் இடத்திலுள்ள பள்ளிக்கூடத்திற்குத் தூக்கி வரப்படுகின்றார். அப் பள்ளிக்கூடம் மிகவும் பாழடைந்து போய்க் கிடந்தது. அங்கு ஆசிரியையாகப் பணியாற்றும் ஒருவரே சே யின் இரத்தத்தைத் துடைத்துச் சுத்தம் செய்கின்றார். அவருக்கு சே சொன்ன வார்த்தைகள் "நான் உயிருடன் இருந்தால் உங்களுக்கு நல்லதொரு பள்ளிக்கூடம் கட்டித் தருவேன்"....

இப்போது புரிகின்றதா? உறுதியும் மென்மன உணர்வும்...

-ஆசிரியர்-

## மாத்தளைக் கொலைகள் தொடர்பாக மறைப்பதற்கு எதுவுமில்லை – அரசு

மாத்தளையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியினை மூடி மறைத்து அதன் சூத்திரதாரிகளைப் பாதுகாப்பதற்கு அரசு முயற்சிக்கின்றது என்னும் குற்றச்சாட்டை அரசு நிராகரித்துள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியின் விசாரணைகளுக்காக சுதந்திரமான விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிக்கும் முயற்சியில் சனாதிபதி மகிந்த ராஜபக்ச இறங்கியுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பமைச்சின் செயலாளரின் கூற்றுப்படி அவ் ஆணைக்குழுவிற்கான அங்கத்தவர்கள் எவரும் தற்போது வரை பெயரிடப்படவில்லை எனத் தெரியவருகின்றது. மேலும் "மூன்று, நான்கு காரணிகளின் அடிப்படையில் இந்த மனிதப் புதைகுழி எப்போது உருவாக்கப்பட்டது என்பதில் தீர்மானமின்றியிருப்பதாக" பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் லக்ஸ்மன் குழுகள்ள அழுத்தம் திருத்தமாக ஆங்கில நாளிதழான "சிலோன் டுடே" இற்கு தெரிவித்துள்ளார்.

எனினும் இவ்வாறு ஆணைக்குழுவொன்றை அமைப்பது அரசின் பிரதான பங்காளிகளிற்கு இக் கொலையுடன் உள்ள தொடர்புகளை மூடி மறைக்கவே என ஐ.தே.கட்சியும் ஜே.வி.பியும் கருதுவதாகவும் அந் நாளிதழ் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

இச் சடலங்களின் எச்சங்களிலிருந்து அவை சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டதற்கான தடயங்கள் காணப்படுவதாக மாத்தளைச் சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் அஜித் ஜெயசேன தெரிவித்துள்ளார்.

## மக்கள் மீள் குடியேற்றத்திற்காக நீதிமன்றத்திற்கே செல்ல வேண்டும்

**– த.தே.கூ –**

போரினால் இடம்பெயர்க்கப்பட்டுள்ள மக்களை அவர்களது காணிகளில் மீள்குடியேற்றுவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள நீதிமன்ற உதவியை நாட த.தே.கூ தீர்மானித்துள்ளது. த.தே.கூ வின் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களின் கூற்றுப்படி சொந்த இடங்களில் போரினால் குடிபெயர்க்கப்-பட்ட மக்களை மீள்குடியேற்றுவதற்கு நீதிமன்றங்களின் உதவியை நாடவேண்டியிருப்பதாக தெரிய-வருகின்றது. அத்துடன் மீள் குடியேற்றத்தை வலியுறுத்தும் எதிர்ப்பார்ப்பாட்டங்களை தற்போது வரை மீள்குடியேற்றப்படாத மக்கள் முன்னெடுப்பதற்கு த.தே.கூ தனது முழு ஆதரவையும் வழங்கும் என்பதும் தெரியவருகின்றது. மீள்குடியேற்ற அமைச்சின் தரவுகளின் படி போரினால் குடிபெயர்க்கப்பட்ட 17749 பேர் தற்போது வரை மீள்குடியேற அனுமதிக்கப்படவில்லை என்பது தெரியவருகின்றது.

## மருத்துவ வண்டிகள் வழங்கப்பட்டன




திருக்கோணமலை பொது வைத்தியசாலைக்கும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கும் இரு மருத்துவ ஊர்திகள் கையளிக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் அவர்களும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் மன்ஸூர் அவர்களும் இணைந்து குறித்த வண்டிகளை கையளித்துள்ளனர் இந்நிகழ்வில் கிழக்கு மாகாண தவிசாளர் ஆரியவதி கலப்பதியும் கலந்து கொண்டிருந்தார்.



# ஆசிய முரசு

## "புலிகளால் அச்சுறுத்தப்பட்டாரா கருணாநிதி?"

**– விக்கி லீக்ஸ்**



கருணாநிதியைப் புலிகள் அச்சுறுத்தியிருக்கலாம் என அமெரிக்கா நம்பியிருந்ததாக விக்கிலீக்ஸ் செய்தி கசிந்துள்ளது. தமிழக முதல்வராக இருந்த காலப்பகுதியிலேயே அதாவது 1989 களிலேயே இவ் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்க வேண்டும் என அமெரிக்கா கருதியிருந்ததாக விக்கி லீக்ஸின் இணையம் தெரிவித்துள்ளது.

போதியளவு ஒத்துழைப்பு வழங்காவிட்டால் தமிழகத்தில் ஆயுத வன்முறைகளை வெடிக்கச் செய்வோம் என அவர் அச்சுறுத்தப்பட்டிருக்கலாம் என அவ் இணையம் மேலும் தெரிவித்துள்ளது.

## முஷாரப்புக்குத் தடை



அண்மையில் டுபாயிலிருந்து நாடு திரும்பிய பாக்கிஸ்தானின் முன்னாள் இராணுவத் தளபதியும், சனாதிபதியுமான முஷாரப் பாக்கிஸ்தானை விட்டு வெளியேறுவதற்கு பாக்கிஸ்தான் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. கடந்த 2002ம் ஆண்டு பாக்கிஸ்தான் சனாதிபதியாக முஷாரப் இருந்த காலத்தில் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ கொல்லப்பட்டமைக்கும் நீதிபதிகளை கைது செய்தமை தொடர்பாகவும் முஷாரப் மீது தேசத் துரோக வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்நிலையில் கடந்த வாரம் விசாரணைக் [illegible] வழக்கிலேயே [illegible] இத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## பொது இடங்களில் புகைப்பிடித்தனர் இந்திய எம்பிக்கள்

### மக்கள் விசனம்

யாழ்ப்பாணத்திற்குச் சூறாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த இந்தியப் நாடாளுமன்ற அங்கத்தவர்கள் பொது இடங்களில் புகைப்பிடித்துத் திரிந்தமை அங்குள்ள தமிழ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

புகைப்படப்பிடிப்பிலும் புகைப்பிடிப்பிலும் அதிக கவனத்தைப் அவர்கள் செலவிட்டனர் என பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரியொருவர் தெரிவித்தார். இக்குழுவில் எந்தவொரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரும் அங்கத்துவம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## காண்டா மிருகங்களைப் பாதுகாக்க இயந்திர வண்டுகளை பயன்படுத்தும் இந்திய அரசு

இந்தியாவில் உள்ள ஒற்றைக்கொம்பு காண்டாமிருகங்களை அழிவிலிருந்து பாதுகாக்க ட்ரோன்ஸ் (Drones) எனும் ஆளில்லா விமானங்களை பயன்படுத்த இந்திய அரசு தீர்மானித்துள்ளது. உலகில் நிறையவே இவ் ஒற்றைக் கொம்பு காண்டா மிருகங்கள் வாழும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. [illegible] தற்காலத்தில் இவ் வன [illegible] வேட்டையாடுபவர்களால் கடுமையான அழிவினை சந்திக்கிறது. இதனை தடுப்பதற்காக ஆளில்லா இயந்திர விமானங்கள் ஊடாக ஒலிகளை எழுப்பி பாதுகாப்பான வழித்தடங்கள் ஊடாக அடர் காட்டுக்குள் இம் மிருகங்களை அனுப்பும் திட்டத்தையே இந்திய தேசிய வனப் பகுதிகளில் செயற்படுத்த இந்திய அரசு தயாராகி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலமைச்சர்களின் முடிவின்படியே இனி காணிகளை கையகப்படுத்த முடியும்

இலங்கைப் பாதுகாப்பு படையின் மக்களின் காணிகளை கையகப்படுத்தும்போது மாகாண முதல்வர்களின் கருத்துக்களை கவனத்திற்கு கொள்ள வேண்டும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கட்டளையிட்டுள்ளதாக கிழக்கின் முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் அண்மையில் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

படையினர் இனி காணிகளை கையகப்படுத்தும்போது முதலமைச்சர்களின் சொற்களுக்கு ஏற்பவே நடந்துகொள்ள வேண்டுமென தெரிவித்ததாகவும் அச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். மேலும் அண்மையில் புல்மோட்டைப் பகுதியில் கடற்படையினர் கையகப்படுத்திய உரிமம் பெறப்பட்ட காணிகளை மீண்டும் மக்களிடம் வழங்குமாறும் பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்டதாக கிழக்கின் முதல்வர் தெரிவித்தார்.




## இணக்கப்பாடும் பொறுப்புக் கூறலும் இல்லையேல் மீண்டும் போர் உருவாகலாம்

**- அமெரிக்கா -**

வரலாற்றை எடுத்துப் பார்த்தால் தம்மிடையே இணக்கப்பாட்டையும் பொறுப்புக் கூறலையும் கொண்டிருக்காத மக்கட் சமூகங்களே மீண்டும் போருக்கு தள்ளப்பட்டுவிடும் அபாயத்தைக் கொண்டமைந்திருப்பதை நாம் காணலாம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் மைக்கல் ஜே. சிசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் நல்லிணக்கமும் பொறுப்புக்கூறலும் வெறுமனே சர்வதேச சமூகத்தின் அறிவுரைகளால் உருவாகி விடாது எனவும் தெரிவித்துள்ளார்.

ஐநாவின் மனிதவுரிமைச் சபையில் அமெரிக்கா ஏன் இரண்டாம் முறையும் தீர்மானமொன்றைக் கொண்டு வந்தது என்பதை விளக்கிய தூதர் ''முதலாவது தீர்மானத்தின் பரிந்துரைகளிற் சில நிறைவேற்றப்படாமலுள்ள நிலையில், 2012இல் இருந்து 2013 மார்ச் வரையான காலப்பகுதிக்குள் இலங்கையில் நிலைமை சில வழிகளால் மேலும் சீரழிந்து போய் இருந்ததே காரணமாகும்'' என அவர் மேலும் தெரிவித்தார்.

சில விடயங்கள் தொடர்பாக தம்மிடையே மாறுபட்ட கரிசனைகள் காணப்பட்டாலும் அமெரிக்காவிற்கும் இலங்கை மக்களிற்கும் இடையேயான உறவு நிரந்தரமானது என்பதில் மாற்றுக் கருத்தில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

## கம்பள வீதியில் கற்பூரம் எரித்தால் பத்தாயிரம் அபராதம் யாழ் மாநகர சபை அதிரடி

திருஷ்டி கழிப்பதற்காக கம்பள வீதியில் கற்பூரம் எரித்தால் பத்தாயிரம் ரூபா தண்டம் அறவிடப்படவேண்டுமென யாழ்மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

வெள்ளிக் கிழமைகளில் வர்த்தக நிலையங்களில் திருஷ்டி கழிப்பதற்காக கற்பூரம் எரிக்கும் போது, கற்பூரம் கம்பள வீதியில் எரிக்கப்படுகின்றது.

இதனால், கம்பள வீதியில் துவாரம் ஏற்பட்டு, கம்பளம் ஊடாக தண்ணீர் சென்று கம்பளம் சிதைவடைந்து வீதி பழுதடைந்து விடும். யாழ் நகரில் 1 கிலோ மீற்றர் வீதிக்கு கம்பளம் இடுவதற்கு 10 மில்லியன் ரூபா நிதி செலவிடப்படுகின்றதாகவும் அவர் கூறினார். அத்துடன், அரச சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுவதற்கு இடமளிக்க முடியாதென்றும் அவற்றினை தவிர்க்கும் முகமாக கம்பள வீதியில், கற்பூரம் எரிப்பதை தவிர்க்குமாறு வர்த்தகர்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், அறிவித்தலை மீறி செயற்படும் வர்த்தக நிலையங்களுக்கு பத்தாயிரம் ரூபா தண்டம் அறவிடப்படுமென்றும் யாழ் மாநகர முதல்வர் மேலும் கூறினார்.

*வி. மைக்கல் கொலின்*

## வரலாற்றில் வாழ்தல்

*''செயற்பாட்டாளன் ஒருவன் தான் செய்து முடித்த விடயங்களால் அவற்றின் சுவடுகளால் வரலாற்றில் பேசப்படுவானே அன்றி தனது வரலாற்றை தானே பேசமாட்டான்'' என எழுதும் பவித்ரனுக்கு ஒன்றைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். வரலாற்றை எழுதுவதற்கு வானத்தில் இருந்து எந்த தேவதூதர்களும் வருவதில்லை. வரலாற்றை படைப்பவர்களும் நாங்களே! வரலாற்றை எழுதுபவர்களும் நாங்களே!*

பவித்ரன் தனது எதிர்வினையின் முதல் பகுதிக்கு சூட்டிய தலைப்பு "பிள்ளையை காட்டி பூதம் விழுங்கிய கதை'' இதில் யார் பூதம், யார் வரலாற்றை விழுங்குகிறார்கள் என்பது எல்லோருக்கும் புரியும். தன்னைத் தானே 'பூதம்' என எழுதும் பவித்ரனின் பெருந்தன்மையை மதிக்கிறேன். "தோண்டும் இடங்களில் எல்லாம் புத்தர்சிலைகளைகள் வருவதும், மெல்லமெல்ல மெதுமண் அபகரிக்கப்படுவதும், பவித்ரன் வரலாற்றை விழுங்க நினைப்பதும் என்னைப் பொறுத்தவரை ஒன்றே!

தனது கட்டுரையின் நோக்கம் கலை இலக்கியவாதிகளின் ஒற்றுமை என்றும். தான் மேடை ஏறியதில் இருந்து இதனை வலியுறுத்துவதாகவும் கூறும் பவித்ரன் தன்னை ஒரு தீவிர இலக்கியவாதியாக கட்டமைக்க முயல்கிறார். ஆனால் இலக்கிய மேடைகளில் அறிவிப்பாளர்களை இலக்கியவாதிகள் என நம்பும் அளவுக்கு திருகோணமலை இலக்கியம் தரம் தாழ்ந்துவிடவில்லை என்பதே எனது அபிப்பிராயம். எனது எதிர்வினைக்கு பதில் கூறவந்த பவித்ரன் அதனுடன் எதுவிதத்திலும் தொடர்புபடாத 'மகுடம்' வெளியீடு தொடர்பாகவும் மகுடத்தின் முதல் வெளியீட்டிற்கான அறிமுக விழாவினைத்தான் திருகோணமலையில் ஒழுங்கு செய்தது பற்றியும் சில பல தகவல் பிழைகளளோடு (இதிலும் தவறு) குறிப்பிடுகிறார்.

'மகுடம்' நான் பிரதம ஆசிரியராக இருந்து மட்டக்களப்பில் வெளியிடும் கலை இலக்கிய காலாண்டு சஞ்சிகை. இதன் முதல் இதழின் வெளியீட்டு விழா மட்டக்களப்பில் நடைபெற்றது. எனது வேண்டுகோளின் பேரில் எனது நண்பரும், எழுத்தாளருமான பெரிய ஐங்கரன் அவர்கள் தனது 'இளங்கோ கழகத்தின் மூலம் குறித்த அறிமுக விழாவினை ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் அந்த விழாவிற்கு தலைமையுரை தொடக்கம், நன்றியுரை வரை யாரை அழைக்க வேண்டும் என நானே தீர்மானித்து சொன்னதன் பேரில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு பெரிய ஐங்கரனின் மாணவரான பவித்ரன் முன்னின்று செயற்பட்டார். அன்றைய தினம் நான் மட்டக்களப்பில் இருந்து காலை பத்து மணிக்கு வந்து சேர்ந்ததும் நானும் பவித்ரனும் சேர்ந்து அவர் குறிப்பிட்டது போல் முப்பது அல்ல பத்து அழைப்பிதழ்களை அவர்கள் கொடுக்காத பல இலக்கியவாதிகளுக்கு பகல் 12.30 மணி வரை கொடுத்தோம். அதன் பின்னர் பவித்ரன் தனது வகுப்பிற்கு சென்றுவிட்டார். மாலை 3 மணிக்கு நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த விழாவின் மூலம் திருகோணமலையில் தெரியாத பல இலக்கியவாதிகளை பவித்ரன் அடையாளம் கண்டதை அவரே என்னிடம் ஒப்புக்கொண்டிருந்தார்.

இளங்கோ கழகம் அமைப்பு ரீதியாக செயற்பட்டது. ஆனால் அந்த விழாவினை முன்னின்று செயற்படுத்தியவர் பவித்ரன். இதனை நான் எந்த சந்தர்ப்பத்திலும் மறுக்கவில்லை. மறக்கவில்லை.

*இதைத்தான் நான் மீண்டும் மீண்டும் சொன்னேோன் அமைப்பு, அமைப்பு ரீதியான முயற்சிகளுக்கு பின்னால் ஒன்றோ, இரண்டோ என சில மூளைகள்தான் இயங்கிக் கொண்டிருக்கும். இதைப்புரிந்து-கொண்டால் அமைப்பு தொடர்பாக அதிகம் அலட்டிக்கொள்ளும் தேவை யாருக்கும் இருந்திருக்காது.*

1995 தாகத்திற்குப் பின்னர் இற்றைவரை எத்தனை இலக்கிய அமைப்புக்கள் திருகோணமலையில் தோன்றின, மறைந்தன, இனிமேலும் தோன்றும். இதைத்தான் எனது கட்டுரையில் குறிப்பிட்டேன். யாரும் திருகோணமலை மண்ணின் இலக்கியத்தை தூக்கிப்படிக்கத் தேவையில்லை. அது காலத்துக்குக் காலம் தனக்கான செயற்பாட்டாளர்களை அடையாளப்படுத்திக்கொண்டேயிருக்கும்.

''என் [illegible] இளைஞர்கள் பொது அமைப்பொன்றை உருவாக்கும் முனைப்புடன் இறங்கினால் நான் துணை நிற்பதாக கூறும் கொலின் அவர்களிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டியிருக்கிறது. திருகோணமலை இலக்கியத்துக்கு வருடக்கணக்கில் பூபாளம் பாடிய உங்களால் அல்லது உங்கள் முயற்சியால் ஏன் ஆரம்பத்திலேயே இவ்வாறான பொது அமைப்பொன்றை உருவாக்க முடியவில்லை. அல்லது இங்கிருக்கின்ற மூத்த இலக்கியவாதிகளால் ஏன் அது முடியாமல் போனது? என்று சிறுபிள்ளைத் தனமாக கேட்கும் பவித்ரனுக்கு,... தாகம் கலை இலக்கிய வட்டத்தின் செயற்பாட்டுக் காலம் 1985 - 1995. 1983 ஜுலை கலவரத்தின் பின்னர் மிகவும் வெந்து போனதும், நொந்து போனதுமான மண் திருகோணமலை. இக்காலகட்டத்தின் பயங்கரம் பற்றி அக்காலத்தில் பிறந்தேயிராத பவித்ரனுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. இதில் அவர் குறிப்பிடும் 'தமிழ்ச்சங்கம்' என்ற பொது அமைப்பை எப்படி உருவாக்க முடிந்திருக்கும்? யதார்த்தபூர்வமாக சிந்தித்துப் பாருங்கள். அக்காலத்தில் 'மாணவன்' என்ற நிலையில் நான் தாகத்தை வெளியிட்டது திருகோணமலையில் இலக்கிய வரட்சி நிலவிய காலகட்டம். அன்றும் இலக்கியவாதிகளிடையே 'கூதல்'போக்கு இருந்தது. ஆனால் அனைவரும் தாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினர். ஏனென்றால் அன்றைய திருகோணமலையின் இலக்கிய அடையாளமாக தாகமே இருந்தது. அதற்கு மிக முக்கிய காரணம் நாங்கள் மேடைகளில் அறிவிப்பாளராக இருக்கவில்லை. இலக்கிய செயற்பாட்டாளராக இருந்தோம். எங்களுக்கு பின்னால் திருகோணமலை மக்கள் இருந்தார்கள். நாங்க்ளே பொது அமைப்பாக இருந்தோம். எனவே பொது அமைப்பு என்ற தேவை இருக்கவில்லை.

ஆனால் இன்றைய நிலையில் அதுவும் போராட்ட சூழ்நிலையில் இருந்து விடுபட்டு ஒரு சகஜமான வாழ்விற்குள் மக்கள் தம் ஜீவிதங்களை தேடும் நிலையில் கலை இலக்கியத்தின் மூலம் எமது கடந்த கால அவலங்களை பதிவு செய்யவேண்டிய தேவை இருக்கிறது. அத்தகைய முயற்சிக்கு ஒரு பொது அமைப்பின் தேவைப்பாடு உணரப்பட்டுள்ளது. ஆனால் அந்த பொது அமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகளில் யார் முன் நிற்பது என்பதே இப்போதுள்ள பிரச்சினை? இந்தக் கேள்விக்கு பதில் தேடுவதை விடுத்து கால சூழல் வர்த்தமானம் தெரியாமல், தெரியவும் முயற்சிக்காமல் இலக்கியவாதிகளுக்கிடையே ஒற்றுமையில்லை என 'முகாரி' பாடிக்கொண்டிருப்பதால் என்ன நடந்துவிடப்போகிறது.

பவித்ரன் கலீல் ஜிப்ரானின் கவிதையை தனது எதிர்வினையில் எந்த அர்த்தத்தில் இணைத்தாரோ தெரியவில்லை. ஒருவேளை தான் ஜிப்ரானின் கவிதையை வாசித்துள்ளேன் என்பதை தெரியப்படுத்தவோ தெரியாது. கவிதையில் குறிப்பிடுவதுபோல் இங்கு யாரும் தடுக்கி விழவில்லை. தடைக்கல்லும் முன்னால் இல்லை. (பவித்ரன் தனது எழுத்துக்கள் மூலம் யாரையும் தடுக்கி விழுத்தாமல் இருந்தால் அதுவே அவர் திருகோணமலை இலக்கியத்திற்கு செய்யும் பெரும் புண்ணியம்)

"வாசிக்கத் தெரியாத வம்பர் தலைப்பட்டு காசிக்கு ஐநூறு கவி...'' என ஔவையாரே பாடியுள்ளார். ஔவையார் காலத்திலேயே அப்படி என்றால் இன்றைய காலத்தில் கேட்கவா வேண்டும்.

இறுதியாக - இந்த எதிர்வினை தொடர்பாக பவித்ரனால் அதிகம் அதிகமாக பற்பல தலைப்புக்களில் என்னைப் பற்றியும் எனது இலக்கிய ஆளுமை பற்றியும் எதிர்வினை ஆற்றலாம். பவித்ரன் மனது ஆற ஒன்றை மட்டும் சொல்கிறேன். இனிமேல் தங்கள் எந்த எழுத்துக்ககும் நான் எதிர்வினை ஆற்றப்போவதில்லை. அதற்கான நேரமும் எனக்கு இல்லை எனவே நீங்கள் விரும்பியபடி எல்லாம் எழுதலாம். எழுதுங்கள் பேனை உங்களுடையது - பத்திரிகை உங்களுடையது. வாழ்க பவித்ரன்.

இந்தப் பகுதியில் பிரசுரமாகும் கட்டுரைகள் பெரும்பாலும் தணிக்கைக்கு உட்படாத தனிமனிதர்களின் கட்டுரைகளே! இதன் கருத்துக்கள் மலைமுரசினுடையது எனத்தப்பார்ப்பிதம் செய்தல் வேண்டாம்.

மலைமுரசு பத்திரிகை உங்கள் எல்லோருடையது என்பதையும் தயவுசெய்து வாசகர்கள் கருத்திற்கொள்ளவும் ஆ-ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சென்ற வாரம்...*
*படுக்கை முள்ளாய் குத்தியது. கட்டிலில் இருந்து எழும்பி ஜன்னலுக்கு தாவினான். விண்மீன்கள் துயிலாது காவல் செய்தன.*

தம்பலகாமம் த. வேலாயுதம்

# தம்பன் கோட்டை

பாகம் - 11

## வரலாற்று நாவல்

திடீரென அவன் மனதில் ஒரு மின்வெட்டு யோசனை! ஆம் அப்படித்தான் செய்யவேண்டும்.... அதைவிட்டால் வேறு வழியில்லை. யார் என்ன எதிர்த்தாலும்... அவள்மட்டும் சரி என்று ஒரு வார்த்தை சம்மதம் சொன்னால் போதும், அவளையும் அழைத்துக்கொண்டு தென்இந்தியாவுக்கு சென்று விடலாம். அங்கு சோழ அரசப் பிரதிநிதியாக இருக்கும் சிற்றப்பா கமலசேகரரின் சிபாரிசில் சோழ சைன்னியத்தில் சேர்ந்து விட வேண்டியதுதான்.

நடக்கவேண்டியது நடந்து விட்டது என்று மன்னர் மன்னித்து விட்டாலும் விடுவார்... ஆனால் அன்னை இரத்தினாவதிதேவிதான் பெரிதாகத் துயரப்படுவார்.. இறப்புக்குச் சமனான துயர் அவளை வாட்டி எடுக்கும் என்பது மட்டும் நிச்சயம்!

ரங்கநாயகி எப்படியோ.. வயதான தந்தையை, ஆசானுக்கு ஆசானாக இருக்கின்றவரை இங்கே தனித்து விட்டுவிட்டு நம்முடன் வரச்சம்மதிப்பாளா?. அவள் மட்டும் வர மறுத்துவிட்டால்? படுக்கைக்குத் திரும்பியவன் நீண்ட நேரம் துயிலவேயில்லை. இரண்டாம் சாமத்தில் காவல் மாறும் ஒலியைக் கேட்டபடியே மெல்லக் கண்மூடத்தொடங்கினான்.

அவள் ஆவலோடு எதிர்பார்த்த பொழுது விடிந்தது. பொழுது விடிந்ததா? இல்லை இரவு முடிந்ததா? அவளுக்கு இது தேவையில்லா ஆராய்ச்சி. பகல் முழுவதும் பதைபதைப்புடன் குட்டிபோட்ட பூனைபோல கூடத்திற்கும் அறைக்குமிடையே அலைந்தாள். கடைசியாக மாலையானதும் வீட்டில் இருக்கப் பிடிக்காமல், அலைமோதும் சிந்தனைக்கு தடைபோடும் முயற்சியாக மணல் பரப்புக்கு வந்த ரங்கநாயகி அமர்ந்திருந்தாள். அவள் சிந்தனையோ கட்டறுத்துப் பாய்ந்து கொண்டிருந்தது.

குமரன் வந்ததையோ, புரவியை மரத்தில் கட்டிவிட்டு அவளை நெருங்கியதையோ அவள் உணர்ந்து கொள்ளவில்லை. என்ன ரங்கா ஒரு மாதிரியாக இருக்கிறாய்? இராகம் பாடலாமா? என்று சிரித்தபடி கேட்டபோதுதான், திடுக்கிட்டுத் தலையைத் திருப்பினாள். அவள் கண்களில் முத்தாகிப் பளபளத்த கண்ணீர்த் துளிகள்!

ஏன்...... ஏன் இந்தக்கலக்கம்?

இத்தனை நாட்களாக அவனுடன் அருகே அமர்ந்து பாடி மகிழ்ந்தவள் இன்று அவனைக் கண்டதும் திரண்டு வந்த கண்ணீரை மறைக்க முயன்றவளாய் சரேலென எழுந்து தலை வணங்கி நின்று பிரபு! தாங்கள் கோட்டைத்தளபதி என்று தெரியாமல் இத்தனை நாட்கள் தகுந்த மரியாதை செலுத்தாமல் அபச்சாரம் செய்து விட்டேன். சிறுமி என்னை மன்னிக்க வேண்டும் என்றாள் அவள் கேலிபண்ணுகிறாளா.. அல்லது உண்மையாகத்தான் சொல்லுகிறாளா? ஏதேது என்னை அரசனாக்கினாலும் ஆக்குவாய் போலிருக்கிறது.. நான் கோட்டைத் தளபதியா?.. இந்தத் தவறான தகவலை யார் உனக்குத் தந்தது? நான் ஏற்கனவே என்னைப் பற்றிய விபரங்களை உனக்குக் கூறியிருக்கிறேனே.. நம்பவில்லையா?

நம்பியதால்தான் இவ்வளவு துன்பம் அனுபவிக்கிறேன். நீங்கள் கூறியதுபோல் சாதாரண வீரராக இருந்தால் என் சந்தோசத்துக்கு கரையேது? அப்பாதான் எனக்கு எடுத்துச் சொன்னது.... நீங்கள் கலிங்க விஜயவாகு சக்கரவர்த்தியின் பட்டத்து இராணியின் மூத்த சகோதரியின் புதல்வர்.. உதயகுமரன் .. கோட்டைப்புதிய தளபதி... அரச குலத்தினர்... இதையெல்லாம் நான் நம்பியவர் சொல்லவில்லை... எனது தந்தைதான் சொன்னார்...

அவள் கண்கள் கலங்கின.

ரங்கா அழாதே ... நான் சொன்னதை நம்பாமல் அப்பாவும் மகளும் துருவித் துருவி ஆராய்ந்திருக்கிறீர்கள்... நல்லதுதான் அதை ஒருபுறம் வைத்துவிட்டு உன்னோடு சில விடயங்களைப் பேசி நான் சில முடிவுகளை எடுக்கவேண்டும். உட்கார்... அவள் உட்காராமல் நின்றுகொண்டே அடம்பிடிப்பதைக் கண்டு தனக்குள் சிரித்துக்கொண்டு, குரலில் போலியாக ஒரு கடுமையைக்காட்டி நான் தம்பன் கோட்டைத்தளபதி உத்தரவிடுகிறேன்... நீ வழமைபோல் இருக்கும் இடத்தில் போய் உட்கார்... என்றான். அவன் குரலில் கடுமை போலியானது என்று உணரும் நிலையில் அவள் இருக்கவில்லை. நிமிர்ந்து. அவன் கண்களைப் பார்த்தவள், அவன் உத்தரவிற்குக் கட்டுப்பட்டாள்! ஒரு மறுப்பும் தெரிவிக்கவில்லை.

உதயகுமரன் அவ்விடத்தில் வந்தமர்ந்து சிறிது நேரம் ஆசையோடு அவளைப் பார்த்தான். அவள் தலைகுனிந்து கொண்டாள். அவன் ஒரு முறை தொண்டையைக் கனைத்து அடைப்பை அகற்றிவிட்டு கனிவு ததும்பும் குரலில்....ரங்கநாயகி நீ பாட்டுப்பாடி என்னை மகிழ்விப்பது மட்டும் தானா? உன் மனதில் எதையாவது மறைத்து வைத்திருக்கிறாயா? என்று கேட்டான். பதிலேயில்லை... மௌனமாக இருந்தாள்.

என்னோடு கோபத்தில் இருப்பதால் நீ பேசமாட்டாய் அப்படித்தானே... சரி நான் பேசுகிறேன் நீ கேள்... ரங்கநாயகி ! நான் உன்னை ஏமாற்ற எண்ணியவனுமல்ல, எண்ணுபவனுமல்ல... இதை முதலில் நீ நம்பு... எனக்கது தெரியாதா என்ன? அவள் மனதுக்குள் சொன்னாள்.

உண்மையில் உன் இனிய கானத்தைக்கேட்டுத்தான் உன்னோடு பேசவிரும்பினேன்.... பிறகு உன் கானத்தைவிட உன்னைப் பார்க்கலாமே என்று வந்து உன்னைச் சந்திக்கத் தொடங்கினேன். என்னையறியாமலே நான் ஒவ்வொரு மாலைப் பொழுதுக்கும் ஏங்கத் தொடங்கினேன். என்னையே நான் கேட்டுப்பார்த்தேன்... எது என்னை இங்கு நாளாந்தம் இழுத்துவந்து உன்காலடியில் சேர்ப்பது என்று ஆராய்ந்து பார்த்தேன்.... பாடலை விட, சிலைபோன்ற உடல் அதை நான் சேர வேண்டும்... அதற்குள் நடமாடும் உயிர்.... அதோடு நான் கலக்கவேண்டும் என்ற ஆசைதான் காரணம் என்று தெரிந்து கொண்டேன்... அதுமட்டுமல்ல இசை மீது எனக்கிருந்த ஆவலுக்கு நீ ஒரு வழிகாட்டி என்றும் ஆசான் என்றும் கருதினேன்.

*தொடரும்...*




# வரலாற்றில் திருகோணமலையல்ல: திருகோணமலையே வாழும்...

இக் கல்வெட்டின் மூலம் திருகோணமலை கோணேஸ்வர ஆலயத்துடன் மையப்படுத்தாமல் ஊராக அடையாளப்படுத்தப்படுவதையும், "திரு" என்ற பகுதி ஒட்டிக் கொண்டிருப்பதையும் அறியலாம். ஆகவே கோணமலையுடன் "திரு" என்ற பகுதி 11ம் நூற்றாண்டின் முற்பகுதிக்கு முன்னரேயே கோணமலையுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அறியலாம். அப்போதே திருவுக்கும் கோணமலைக்கும் இடையில் "க்" இல்லாமல் இருப்பதையும் கவனிக்கலாம்.

திருக்கோணேஸ்வரத்தை மையப்படுத்தாமல் ஒரு ஊராக அல்லது மக்கள் வாழிடமாக திருகோணமலையை குறிக்கும்போது "திருகோணமலை" என்றே குறிப்பிடப்படுகிறது. இதே 10ம் 11ம் நூற்றாண்டுகளில் திருகோணமலையில் தமிழ் பௌத்தர்களும் செல்வாக்குடன் வாழ்ந்திருக்கிறார்கள் இதை இராச இராசப் பெரும்பள்ளியும் அதில் கண்டெடுக்கப்பட்ட, அதைப்பற்றி குறிப்பிடுகின்ற சோழராட்சிகால கல்வெட்டுகளிலிருந்து அறியலாம். எனவே அப்போது திருகோணமலை திருக்கோணேஸ்வரத்துடன் அடையாளப்படுத்தப்படவில்லை. "திருகோணமலை" என்ற பெயர் இதில் வாழ்ந்தவர்கள் எல்லோரையும் பிரதிநிதிப்படுத்துகின்ற ஒன்றாகவே அமைந்திருக்கின்றது. "திருகோணமலை" என்பதை ஒற்றை அடையாளத்தை ஒரு மத இன மேலாதிக்கத்தை மறுதலிப்பதாக அமைந்திருக்கிறது. இது மிகவும் முக்கியமானது.

ஆயினும் போர்த்துகேயருடைய காலம்வரை கோணேசர் கோயிலும் அது அமைந்திருந்த கோணமாமலையில் இருந்த சைவ சமூகமே திருகோணமலையின் முக்கியத்துவம் மிக்கதும் பெருநிதிக் குவியமாகவும் செல்வாக்குமிக்கதாகவும் விளங்கியது.

தமிழகத்தில் எழுச்சிபெற்ற இரண்டாம் பாண்டிய பேரரசு காலத்தில் அதனை உருவாக்கிய முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் திரகொணமலை மலைவரை படையெடுத்தவந்தான். இப்படையெடுப்பை முதலாம் ஜடாவர்மனோடு துணையாட்சி செய்த ஜடாவர்மன் வீரபாண்டியன் (கி.பி.1253 -1281) இலங்கையின் மீது படையெடுத்து தனது வெற்றியைக் குறிப்பதற்காக தனது வம்ச இலட்சினையான இரட்டைக் கயல் அடையாளத்தை திருகோணமலையில் பொறித்து சென்றான். இது பற்றி தமிழகத்தில் உள்ள அவனது பதினொராம் ஆட்சியாண்டுக்குரிய குடுமியாமலைச் சாசனம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

அரைசு செலுத்தியும் அடையவரை
கானா மன்னவர் கண்டு கண்டேங்க
கோணமாமலையிலும் திரிகூடக்கிரியிலும்
உருகெழு கொடிமிசை இருகயலெழுதி
எனை வெந்தனை ஆணை கொண்டு

இன்று திருகோணமலை பிரெடரிக் கோட்டை வாயிலின் இரு மருங்கிலும் உள்ள இரட்டைக் கயல் சின்னங்கள் இவனுடையதே என்று நம்பப்படுகிறது. இதிலும் திருகோணமலை என்ற குறிப்பிடாது கோணமாமலை என்று திருக்கோணேஸ்வரம் அமைந்த மலையின் பெயரே குறிப்பிடப்படுகிறது. அது நான் முன்குறிப்பிட்ட மாதிரி திருகோணமலையின் மையப்பகுதி கோணமாமலையாக இருந்தபடியால்தான். இது திருக்கோணேஸ்வரம் எவ்வளவு செல்வாக்காகவும் நிதிக்குவியமாகவும் விளங்கியது என்பதை உணர்த்த போதுமானதாகும். ஆனால் இதில் "திரு" என்ற அடைமொழி காணப்படவில்லை. கோணேஸ்வர ஆலயம் அமைந்துள்ள கோணமாமலைப் பகுதியைப்பற்றியே இது குறிப்பிடுகிறது எனக் கொள்ளலாம்.

திருகோணமலையில் "திரு"வுக்கும் கோணமலைக்கு இடையில் "க்" சேர்த்தபடி கிடைக்கும் சான்று அருணகிரிநாதருடைய "விலைக்கு மேனியர்" என்ற திருப்புகழில் வரும்..

நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கொ ணாமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு
பூதியில் வருவோனே

என்ற அடிகளே. இதன் பொருள்வருமாறு "என்றுமே நிலைத்து நிற்கின்ற நான்மறைகளை அன்புடன் ஓதிவரும் பெருமைமிகு அந்தணர்கள் வாழுகின்ற திருக்கொணாமலை என்கின்ற திருத்தலத்தில் ஓங்கிநிற்கும் கோபுர வாயிலினுள் அமைந்திருக்கும் "கிளிப்பாடுபூதி" என்னும் நிலையினுள் எழுந்தருளி இருப்போனே!" என்றாகும்.

அருணகிரிநாதர் திருப்புகழில் "திருக்கோணமலை" என்றில்லை. "திருக்கோணாமலை" என்றுதான் உள்ளது. திருக்கோணமலைக்காரர் குறிக்கும் அடுத்த திருப்புகழ்.. "தொடுத்த வாளென விழித்து மார்முலை" என்பதாகும்.

இதில்வரும்..

அறத்தில் வாழுமை சிறக்க வேயறு
முகத்தி னோடணி குறத்தி யானையொ
டருக்கொ ணாமலை தருக்கு லாவிய....
பெருமாளே.

என்ற வரிகளே அவைகள். இதன் பொருள் வருமாறு "அறங்களை வளர்த்து வாழ்ந்த உமா தேவியார் மகிழ்ச்சியுற, ஆறு திருமுகங்களுடன் விளங்கி அழகிய குறத்தியாகிய வள்ளியுடனும், யானை வளர்த்த தேவயானையோடும் அருக்கொணாமலை என்னும் தலத்தில் களிப்புடன் உலாவிய பெருமாளே."

இதில் குறிப்பிடப்படுவது அருட்கொணாமலை என்ற வரிகளே "திருக்கொணாமலை" என்ற வரிகள்கூட இல்லை. இந்த அருட்கொணா மலை கதிர்காமத்திற்கு அருகில் உள்ள ஊர் என்று நம்பப்படுகிறது.

இதன்படிக்கு அருணகிரிநாதர் திருகோணமலையை அல்லாமல் கோணமாமலையில் உள்ள கோணேஸ்வரத்தின் கோபுரத்தில் உள்ள முருகனைக் குறிக்கின்றார் என்பதுதான் ஏற்புடையது. எனினும் இத்திருப்புகழ் திருக்கோணேஸ்வரத்தின் மீது பாடப்பட்டதாக உறுதிப்படுத்த முடியவில்லை.

*(இன்னும் நடுவோம்)*

**சத்தியன்**

**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**
**குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்**
**1929**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வலம்

## இஸ்ரேல் – பலஸ்தீன பேச்சுக்கு அமெரிக்கா முஸ்தீவு

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனமிடையே சமரச பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அமெரிக்கா முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன்கெர்ரி பலஸ்தீன பிரதமர் முகமது அப்பாசுடன் திடீர் சந்திப்பொன்றை நிகழ்த்தியுள்ளார். இவ் விடயம் தொடர்பாக கடந்த மூன்று வாரங்களுக்குள் மூன்று பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெண்கள் மேலாடையின்றிப் போராட்டம்

ஜேர்மனி நாட்டில் ஹனோவெர் நகரில் ரஷ்ய தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் வர்த்தக கண்காட்சி நடைபெற்று வருகின்றது.

இவ் விழாவில் பங்கேற்க ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புதின், ஜேர்மனி ஜனாதிபதி ஏஞ்சலா மெர்க்கெல் ஆகியோர் சென்றனர். அப்போது புதினுக்கெதிராக 3 பெண்கள் திடீரென்று மேலாடைகளை கழற்றி வீசி அரை நிர்வாண போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் சிலர் கைதிகள் போல உடை அணிந்து கோஷங்களை முழங்கியதுடன், ''அரசியல் தீவிரவாதத்தை நிறுத்து'' என்ற பதாகைகளையும் வைத்திருந்தனர். ரஷ்யாவில் பாடல் குழுவினரை கைது செய்து சிறையில் அடைத்தற்கு கண்டனம் தெரிவித்து இந்த போராட்டம் நடைபெற்றது. இந்த திடீர் போராட்டம் ரஷ்ய அதிகாரிகளை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

பின்னர் இச்சம்பவம் குறித்து ரஷ்ய ஜனாதிபதி மாளிகை செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறுகையில், இவை எதிர்பாராமல் உலக அளவில் எந்த நகரிலும் நடைபெற்று வருகின்ற சம்பவமாகி விட்டது. இவர்களை சரியான தண்டனைக்கு உட்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## சோதனைக்குழாய் ஆராய்ச்சியாளர் சேர் றொபர்ட் மரணம்



சோதனைக் குழாய் குழந்தைகளின் முன்னோடியாக திகழ்ந்த பேராசிரியர் சேர் றொபர்ட் எட்வர்ட் அவர்கள் தனது 87வது வயதில் மரணமடைந்துள்ளார்.

சோதனைக் குழாய் ஆராய்ச்சிக்காக நோபல் பரிசு பெற்ற இவர் நீண்ட நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்து தூக்கத்திலேயே மரணமடைந்தார் என்று அவர் உறுப்பினராக இருந்த கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

கடந்த 1925ம் ஆண்டு பிரிட்டனிலுள்ள யார்க்சயரில் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த எட்வர்ட், இரண்டாம் உலகப்போரின்பொழுது பிரிட்டிஷ் ராணுவத்தில் பணிபுரிந்தார். கடந்த 1968ம் ஆண்டு முதல் அவர் மேற்கொண்ட இந்த ஆராய்ச்சியின் தொடர் முயற்சிகளுக்குப்பின்னர், பத்து வருடங்கள் கழித்து 1978ம் முதல் சோதனைக்குழாய் குழந்தை உருவாக்கப்பட்டது.

தற்போது ஐந்து கோடிக்கும் மேற்பட்ட சோதனைக்குழாய் குழந்தைகள் பிறந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த முயற்சிக்காக, அவர் பிரிட்டன் அரசால் சேர் பட்டம் அளிக்கப்பட்டு கௌவிக்கப்பட்டார். உலகின் தலை சிறந்த விஞ்ஞானி என்ற பெயருடன் நோபல் பரிசும் அவருக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஹிலாரி

அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஹிலாரி போட்டியிடுவார் என்று கிளிண்டன் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக கடந்த 1993ம் ஆண்டு முதல் 2001ம் ஆண்டு வரை பதவி வகித்தவர் பில் கிளிண்டன். இவரது மனைவி ஹிலாரி கிளிண்டன் ஒபாமாவின் அமைச்சரவையில் வெளியுறவு துறை அமைச்சராக நான்கு ஆண்டுகள் பணியாற்றி சமீபத்தில் ஓய்வு பெற்றுள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஹிலாரி கிளிண்டன் போட்டியிடுவார் என்ற செய்திகள் வெளியாகியபொழுது, அதை ஹிலாரி கிளிண்டன் உறுதியாக மறுத்தார்.

இந்நிலையில், எதிர்வரும் 2016ம் ஆண்டு நடக்கவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஹிலாரி கிளிண்டன் போட்டியிடுவார் என்று அவரது கணவரும், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியுமான பில் கிளிண்டன் கூறியுள்ளார்.

## நான் அப்படிப்பட்ட பெண் இல்லை – கரீமா திடீர் அறிவிப்பு

என்னை விபசாரப் பெண்ணென்று கூறுவதும், விபசாரம் தொடர்பான விடயங்களில் என்னை இணைத்து பேசுவதும் தவறான விடயங்களாகும். நான் அப்படிப்பட்ட பெண் அல்ல என சில்வியோ பெர்லுஸ்கோனியின் முன்னாள் காதலி கரீமா திடீர் அறிவிப்பைச் செய்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் நான் விபசாரப் பெண் அல்ல பெர்லுஸ்கோனியிடம் பணம் வாங்கிக்கொண்டு அவருடன் உறவு வைத்துக்கொள்ளவில்லை என்றும் பெர்லுஸ்கோனியின் பண்ணை வீட்டு பார்ட்டிக்கு தான் செல்லவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் பெர்லுஸ்கோனியின் விபசார வழக்கில் கரீமாவும் விபசார பெண்கள் பட்டியலில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் – 10

பிரதீபா

1.கையில் ஒட்டிய பாலக்காய் பாலை அகற்ற சிறந்த பொருள்?
   1. சவற்காரம்   2. வெந்நீர்   3. எண்ணெய்
2. பி.ப 7மணி 45 நிமிடத்தை நியம நேரத்தில் குறித்துக் காட்டும் விதம் எது?
   1. 19:45 மணித்தியாலம்   2. 19.45 மணித்தியாலம்
   3. பி.ப 19:45 மணித்தியாலம்
3. வானத்தில் பட்டம் அழகாக பறந்தது இவ்வாக்கியத்தின் எழுவாய்ச் சொல் எது?   1. வானம்   2. பட்டம்   3. அழகாக
4. பொருத்தமற்ற சொல் இடம்பெறும் சொற் கூட்டத்தைத் தெரிக.
   1. தாய், அம்மா, அன்னை, மாதா   2. அன்பு, பாசம், நேசம், இரக்கம்
   3. சந்திரன், மதி, திங்கள், நிலா
5. "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்ற பழமொழியின் கருத்து யாது?
   1. கொடிகள் பலமானது   2. அடம்பன் கொடி வைரமானது
   3. ஒற்றுமையே அதிக பலமானது
6. பறக்கமுடியாத பறவைகளைக் கொண்ட கூட்டம் எது?
   1. கிவி, தீக்கோழி, பென்குயின்   2. வௌவால், கிளி, புறா
   3. காகம், பருந்து, கோழி
7. பின்வரும் பாடலில் இருந்து விடையளிக்குக.

   மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின்
   மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்
   மன்னனிற்கு தன்தேசமல்லாமற் சிறப்பில்லை
   கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

   மேல் உள்ள கூற்றில் யாரைப்பற்றி சிறப்பித்து கூறப்பட்டுள்ளது?
   1. கல்வி கற்றோரை   2. மன்னனை   3. கல்வி கற்காதோரை
8. ஆணிவேரைக் கொண்ட தாவரம் எது?
   1. சோளம்   2. குரக்கன்   3. எள்ளு
9. பாடசாலையொன்றின் அடையாளத்தை வெளிப்படுத்தக்கூடிய அம்சங்கள் அல்லாதவை எது?
   1. பாடசாலைக் கொடியும், பாடசாலைச் சின்னமும்
   2. பாடசாலை மகுட வாசகமும், பாடசாலை கழுத்துப்பட்டியும்
   3. பாடசாலை கீதமும், தமிழ்மொழி வாழ்த்துப்பாடலும்
10. மண்ணினுள் புதைக்கும் போது மிக நீண்ட பாலம் பிரிகையடையாது. சூழலை மாசடையச் செய்யும் பதார்த்தம் எது?
   1. பிளாஸ்ரிக்   2. விலங்குக் கழிவு   3. கண்ணாடி
11. தற்போது தயாரிக்கப்படும் மூலிகைச் சவர்க்கார வகைகளில் அடங்கியிருக்கும் மூலிகைத்தாவரம் எது?
   1. கற்றாளை   2. தூதுவளை   3. ஏலம்
12. புயல் தொடர்பான எச்சரிக்கையை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு மிகப்பொருத்தமான ஊடகம்
   1. கணனி (இனட்ர்நெற்)   2. மின்னஞ்சல்   3. வானொலி
13. நாம் விலங்குகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஆடைவகை எது?
   1. பருத்தி ஆடை   2. டெரின் ஆடை   3. பட்டுத்துணி
14. சதுப்பு நிலத்தில் வளரும் ஊன் உண்ணித் தாவரங்கள் பூச்சிகளை ஏன் பிடித்து உண்ணுகின்றன.
   1. நைதரசனைப் பெற்றுக்கொள்ள   2. இரையாக உண்பதற்கு
   3. போசனை பெறுவதற்கு
15. அதிகளவு கொழுப்புச் சத்தை கொண்ட பழவகை எது?
   1. ஆனைக்கொய்யா   2. விளாம்பழம்   3. நெல்லி
16. இரு கார்கள் ஓரிடத்திலிருந்து புறப்பட்டு அவை ஒவ்வொன்றும் எதிர்த்திசையில் 100மீ தூரம் சென்றன. பின்னர் ஓர் கார் வலது பக்கமும், மற்றைய கார் இடது பக்கமும் திரும்பி ஒவ்வொன்றும் 200மீ தூரம் சென்றன. இப்போது இரு கார்களுக்கும் இடையிலான தூரம் என்ன?
   1. 600மீ   2. 300மீ   3. 200மீ
17. நான்கு மனிதர்கள் ஒரே இடத்திலிருந்து புறப்பட்டு நான்கு மணித்தியாலங்கள் நடந்து 32 கிலோமீற்றர் தூரம் சென்றனர். ஒரு மணித்தியாலத்தில் ஒரு மனிதன் நடந்த தூரம் எவ்வளவு?
   1. 2கி.மீ   2. 8கி.மீ   3. 10கி.மீ
18. ஒரு நோயாளிக்கு ஒரு வேளை மூன்று மாத்திரை வீதம், நாளொன்றுக்கு இரு தடவைகள் மாத்திரைகள் உட்கொள்ள வேண்டும். இந்நோயாளிக்கு 18 மாத்திரைகள் எத்தனை நாளைக்குப் போதுமானது?
   1. 5 நாட்கள்   2. 3 நாட்கள்   3. 4 நாட்கள்
19. நீர்த்தாங்கியொன்றை நிரப்புவதற்கு ஒரு நிமிடத்தில் 25லீ நீரை நிரப்பும் குழாயையும், இரண்டு நிமிடத்தில் 60லீ நீரை நிரப்பும் குழாயையும் பொருத்தியுள்ளான். இரு குழாய்களையும் ஒரே நேரத்தில் திறந்து விட்டால், 10 நிமிட நேரத்தில் எவ்வளவு நீரை நிரப்பும்?
   1. 850லீ   2. 550லீ   3. 500லீ
20. 1மீ 25செ.மீ நீளமுடைய கம்பித்துண்டை 205செ.மீ நீளமுடைய கம்பியுடன் இணைத்தால், கம்பியின் மொத்த நீளம் எவ்வளவு?
   1. 3மீ 255செ.மீ   2. 1மீ 230செ.மீ   3. 3மீ 30செ.மீ

பெயர்: ..............................................................
..............................................................
முகவரி: ..............................................................
..............................................................
பாடசாலை: ..............................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரிய தீபகற்ப போர்ச்சூழல்

## இலங்கையின் விடிவெள்ளியா?

மாயன்

உலக அரங்கில் மிக பயங்கரமாகப் பேருரு எடுத்திருக்கின்றது கொரிய தீபகற்பப் போர்ச்சூழல். தென்கொரியா மீதும் அதன் ஆதரவு நாடான அமெரிக்கா மீதும் தனது முந்தைய காலனித்துவ நாடான ஜப்பான் மீதும் வலிந்து போர் தொடுக்கும் முனைப்புடன் வடகொரியா தயாராகி வருகின்றது அல்லது அவ்வாறானதொரு தோற்றப்பாட்டை அது ஏற்படுத்தி வருகின்றது எனலாம்.

இரண்டாம் உலகப் போருக்கு முன் சுமார் 35 ஆண்டுகள் கொரிய தீபகற்பமானது முழுமையான ஓர் நாடாக ஜப்பானிய பேரரசரின் ஆட்சியின் கீழ் ஓர் காலனித்துவ நாடாகவே இருந்துள்ளது. எனினும் இரண்டாம் உலகப் போர்தான் கொரிய உடைவுக்கு ஏதுவாய் போய்விட்டது.

இரண்டாம் இலகப் போரின் முடிவில் அதாவது செப்டம்பர் 1945ல் ஜப்பானிய பேரரசர் எதிரி நாடுகளிடம் சரணாகதியடைந்ததை தொடர்ந்து கொரிய தீபற்பமானது இரண்டாம் உலகப் போரின் வெற்றி நாயகர்களான அமெரிக்க, ஐக்கிய சோவியற் இரஷ்யாவிடமும் சரண் புகுந்தது.

தம்மிடம் சரண் புகுந்த கொரியாவை உலக வல்லரசுகள் இரண்டும் பங்கு போட்டுக்கொண்டன. ஒன்றாயிருந்த கொரியா இரண்டாய்ப் பிரிந்து அமெரிக்காவின் வசமும் இரஷ்யாவின் வசமும் வீழந்தன.

இரஷ்யா ஆளுகைக்குட்பட்ட பிரதேசம் வரகொரியாவாகவும் அமெரிக்க ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசம் தென்கொரியாவாகவும் எழுச்சி பெற்றன. வல்லரசுகளின் ஆட்சியின் முடிவில் கொரியர்கள் தம்முள் பகைமை பாராட்டிக்கொள்ளத் தொடங்கி விட்டனர். அதன் உச்சக் கட்டம் 1950களில் நிகழ்ந்தது. வடகொரியாத் துருப்புக்கள் தென்கொரிய நிலப்பகுதியை ஆக்கிரமிக்கத் தொடங்கியவுடன் இரு நாட்டுக்குமிடையிலான போர் உருவாகியது. மூன்றாண்டுகள் நடந்த இப் போரின் பின் இரு நாடுகளுக்கும் இடையே போர்த்தவிர்புப் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று சர்வதேச நாடுகளின் பின்புலத்துடன் உருவாக்கப் பட்டிருந்தது. சோவியத் யூனியனின் உடைவின் பின் சீன ஆதரவுடன் மட்டுமே இயங்கி வந்த சோசலிசப் பொருளாதாரக் கொள்கையைக் கொண்ட வடகொரியா தனது நடவடிக்கைகளால் அவ்வப்போது சீனாவிற்கும் எரிச்சலூட்டத் தொடங்கி விட்டது. ஆசிய வல்லரசாகும் முனைப்புடன் இயங்கிவரும் சீனாவும் தனது அயல்நாடுகள் யாவற்றுடனும் இயலுமானவரை நட்புபப் பாராட்ட வேண்டிய தேவையிருந்ததால் மேற்கு நாடுகளின் ஆதரவுடன் இயங்கிவந்த தென்கொரியாவுடன் தனது இராசதந்திர உறவுகளை வலுப்படுத்தத் தொடங்கிவிட்டது. இதனால் வடகொரியா தான் உலக அரங்கில் தனித்துவிடப்பட்டதாக உணர்ந்தது. மேலும் கடுமையான பஞ்சம், வரட்சி போன்றவற்றால் உள்நாட்டு உற்பத்தி அருகிவரும் நிலையிலிருந்த வடகொரியா ஐக்கிய நாடுகள் சபையின் உணவு உதவி நிறுவனமான உலக உணவுத் திட்டத்தின் உதவியைத் தற்போதும் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

இத் தனிமையுணர்வினைப் போர்க்கி உலகநாடுகள் முழுவதும் தன்னைத் திருப்பிப் பார்க்க வேண்டும் என்ற நோக்குடன் போர்ப் பிரகடனத்தை வடகொரியா மேற்கொண்டுள்ளது. வடகொரியா தனது ஆயுதப் படைகளுக்கு போர்ப்பயிற்சியைத் துரிதப்படுத்தினாலும் சுமா 1.2 மில்லியன் ஆயதப்படையினரின் பெரும்பகுதி யானவர்கள் உணவு உற்பத்திக்காக வயல்நிலங்களுக்கு செல்ல வேண்டிய தேவை வடகொரியாவிற்கு உண்டு என்பதே இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் மிக ஆக்ரோசமாகக் களத்திற் குதித்துள்ள வடகொரியா தனது இடைத்தூர தாக்குதல் எவுகணைகளை ஜப்பான், ஜப்பானில் உள்ள அமெரிக்கத் தளங்கள், மற்றும் தென்கொரிய நகரங்களைத் தாக்கும் திசைகளில் நிலைப்படுத்தியுள்ளது. இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததைப்போல அணுவாயுதத் தாக்குதலைத் தாம் தேவையேற்படின் நிகழ்த்துவோம் எனவும் வடகொரியா அறிவித்துள்ளதால் உலக அரங்கு கொந்தளித்துப் போயிருப்பதை இக்காலப் பகுதியில் காணலாம்.

இக்கொந்தளிப்பை இலங்கை அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைந்துவருகின்றது. எதிர்வரும் செம்டெம்பர் மாதத்தில் மனிதஉரிமைச் சபையில் இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறுதல் தொடர்பாக ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பான வாய்மொழி அறிக்கையினை மனிதஉரிமை ஆணையர் சபைக்கு வழங்க வேண்டும் என்ற சரத்தைக் கொண்ட, அமெரிக்காவால் கடந்த மார்ச் மாதம் கொண்டுவரப்பட்ட முன்மொழிவுகளை அங்கத்துவ நாடுகள் ஏற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவ்வாறான வாய்மொழி அறிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கு மனிதவுரிமை ஆணையருக்கு இலங்கை அரசு இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறுதல் தொடர்பாக ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பான ஆறுமாத அறிக்கையினை எழுத்துமூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

எனினும் அவ்வாறானதொரு அறிக்கையினை ஆணையருக்கு வழங்க இலங்கை அரசு தயாராயில்லை. அதனைத் தெளிவாக இருநாட்களுக்கு முன்னர் இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் அவர்கள் திட்டவட்டமாக எடுத்தியம்பியுள்ளார். அவரது அறிக்கையின் ஒரு பகுதியில் இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் மட்டும் இலங்கை பேசிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை எனத் தெரவித்திருந்தார். உலகம் கொந்தளித்துக்கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் இலங்கை மீதான கண்காணிப்பினை மேற்கொள்ள மேற்குலகிற்கு அவகாசம் இருக்காது என்ற எண்ணத்திலேயே இவ் அறிக்கையினை வெளியுறவுத்துறை அமைச்சரே வெளியிட்டிருக்கின்றார் போலுள்ளது.

ஆனால் வடகொரியப் போர்ச் சூழலினால் சீனா தன்னுடன் இணைந்த செயற்படவருமாறு அமெரிக்கா, ஜப்பான் மற்றும் இரஸ்யாவை அழைத்துள்ளது. இவ் அழைப்பானது இந்நான்கு நாடுகளிடமும் கண்ணுக்குப் புலனாகாத நட்பு வட்டமொன்றை உறுதியாக ஏற்படுத்தி விடுமாயின் அதன் பின்னர் இலங்கை அரசு சந்திக்கும் களங்கள் மிகச் சோதனையுடையவையாகவே இருக்கும்.

இப் போர்ச்சூழலால் ஆசியாவில் இந்தியாவின் முக்கியத்துவத்தைக் குறைத்து தனது முக்கியத்துவத்தை அதிகரித்துக்கொள்ள சீனா முனையும். அவ்வாறான முனைவுக்க அமெரிக்க ஆசி தேவையாய் இருக்கும். இரய்யாவின் ஆசியைப் பெற்றுள்ள சீனா அமெரிக்க ஆசியைப் பெறுவதற்கு கொரியக் கொந்தளிப்பை சாதாகமாக்கிக் கொள்ளும். அதன் பின் அமெரிக்க சீன உறவுகளின் படி இலங்கையின் மீது விழுந்துள்ள சாவதேசக் கட்டு இறுகும் போல்தான் இருக்கின்றது.

# ஒரு புதைகுழியின் குரல்

கடந்த வாரங்களில் ஒரு இதழில் "மாத்தளையும் மாத்தளனும்" என்னும் தலைப்பில் கட்டுரையொன்றை வரைந்திருந்தேன் அக் கட்டுரையின் இறுதியில் எப்போது அம் மாத்தளை மனிதப் புதைகுழிகள் பேசத்தொடங்குகின்றதே அதன் பின்னரே மாத்தளன் மனிதப் புதைகுழிகளும் பேச ஆரம்பிக்கும் என வரைந்திருந்தேன்.

இன்று மாத்தளைப் புதைகுழிகள் பேச ஆரம்பித்து விட்டது. அப்புதைகுழி எப்போது தனது வயிற்றை திறந்தது என்பது தொடர்பான அனைத்துச் சந்தேகங்களையும் தீர்க்கும் முகமாக நீதவான் சந்துரிகா டி சில்வா அவர்கள் அப் புதைகுழியானது 1987 தொடக்கம் 1990 வரைக்குமான காலப்பகுதிக்கானதே என வெளிப்படையாக தெரிவித்திருந்தார். புதைபொருளியலாளர்களும், சட்ட வைத்திய அதிகாரிகளையும் ஆதாரமாக கொண்டே அவர் இக்கூற்றைத் தெரிவித்திருந்தார்.

நூற்று ஐம்பத்து நான்கு உடலங்களைத் தனது வயிற்றில் புதைத்து வைத்திருந்த மாத்தளைப் புதைகுழி இக் கணத்தில்தான் பேச ஆரம்பித்தது.

சுமார் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களும் யுவதிகளும் அக் காலகட்டத்தில் ஜே.வி.பியுடன் தொடர்பைக் கொண்டிருந்தார்கள் என்ற சந்தேகத்தில் அரச படைகளால் பிடித்துச் செல்லப்பட்ட பின் காணாமற் போயிருந்தனர்.

மாத்தளைப் புதைகுழி பேச முன்னரே அதன் அமானுஷ்யக் குரல் பேசத் தொடங்கி விட்டதை யாரும் புரிந்துகொள்ளவில்லை. அதனை "Colombo Telegraph" என்னும் செய்தி இணையத்தளம் தான் வெளிப்படுத்தியிருந்தது. அக் குரல் மாத்தளைப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட முன்னர் எழுதி வெளியிடப்பட்ட "கோத்தாவின் சண்டை" (Gotta's War) என்ற புத்தகத்தில் ஒலித்துவிட்டது. இப் புத்தகத்தின் 28வது அத்தியாயத்தின் 173வது பக்கத்தில் தனது குரலை அமானுஸ்யமாகப் பதிவு செய்துள்ளது என்றே அவ்விணையத்தளக் குறிப்பு தெரிவிக்கின்றது. அவ் 28வது அத்தியாயம் "2வது ஜேவிபியின் உள்நாட்டுக் கலகம்" எனத் தலைப்பிடப்பட்டிருந்தது. அதன் 173வது புத்தகத்திலுள்ள வசனங்களின் மொழிபெயர்ப்பானது "மே மாதம் 1ம் திகதி 1989ம் ஆண்டு கேணல் விமலரத்ன பிரிகேடியராக பதவி உயர்த்தப்பட கோத்தாபாய இராசபக்ச கஜபா படைப்பரிவின் முதலாவது பட்டாளத்திற்கு கட்டளை இடும் அதிகாரியாக பதவியுயர்த்தப்பட்டு ஜேவிபியின் கலகங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பணியுடன் இராணுவ இணைப்பதிகாரியாக மாத்தளையில் நிலைப்படுத்தப்பட்டிருந்தார். அவரின் கீழ் லெப்டினென்ட் தர நிலையில் சவேந்திர சில்வா, ஜெகத் டயஸ், சுமேத பெரேரா போன்றோர் கம்பனி கமாண்டர்களாக செயற்பாட்டனர்" எனத் தொடர்கிறது என "Colombo Telegraph" செய்தி வெளியிட்டிருந்தது. இதன் பின்னரே மாத்தளைப் புதைகுழி வெளிச்சத்திற்கு வந்தது.

இச் செய்திகளின் பின்னர் தமது உறவுகளைத் தேடத் தொடங்கியுள்ள மனிதர்களின் வாயிலிருந்து மாத்தளைப் புதைகுழி பேசத் தொடங்கிவிட்டது.

கே.ஜி. கமலாவதி தனது இரண்டு புதல்வர்களை டிசம்பர் 13, 1989ல் அரச படைகளிடம் இழந்தார். அவரது பேட்டியினை ஏப்ரல் 7ம் திகதிய சிலோன் டுடே பத்திரிகை வெளியிட்டிருந்தது. அன்று நானும் தனது மகன்கள் இருவரும் மத்தியானச் சாப்பாட்டை அருந்திக் கொண்டிருந்தோம். எனது வீட்டினுள் அடாத்தாகப் புகுந்த இராணுவம் அவர்கள் இருவரையும் அழைத்துச் சென்றது. அவர்கள் அப்போது 18 மற்றும் 17 வயதான உயர்தரம் கற்றுவந்த சுசந்த ஜானக, றோகன நிசான்த ஆகிய இருவருமே. அவர்களைப் பின் தொடர்ந்து நானும் சென்றேன் அவர்கள் இருவரையும் அரச் வாடிவீட்டு முகாமுக்கு (Rest House Camp) அழைத்துச் சென்றார்கள். அடுத்த மூன்றாம் நாள் அம் முகாமில் உயிருடன் உள்ளவர்களின் பெயரை இராணுவ வீரர் ஒருவர் வாசித்தார். அப் பெயர்ப்பட்டியலில் எனது இரு பிள்ளைகளின் பெயரும் சிவப்பு மையினால் வெட்டப்படிருந்தது".

தனது சகோதரனைப் பலிகொடுத்த "பந்துல இடமகம"வின் வாயிலிருந்து வந்துதிர்ந்த வார்த்தைகள் இவை.

அவன் 1980களில் பொறியியல் பீட இறுதி வருட மாணவன். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அறிஞர்குழுவால் சிறந்த மாணவன் என பரிசளிக்கப்பட்டவன். "ஆனந்தா இடமகம" ஆகிய எனது சகோதரனை மிகவும் துன்புறுத்தி வேதனைக்குள்ளாக்கி அவர்கள் கொலை செய்திருப்பார்கள் என்பது எனது குடும்பத்தவருக்குத் தெரியும். தெரியவேண்டியதெல்லாம் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிக்குள் எனது சகோதரனின் உடலமும் உள்ளதா என்பதே. அத்துடன் அவனைக் கொலை செய்ய உத்தரவிட்டது யார்?, யார் அதனைச் செய்தது?, எங்கே?, எப்போது?, அவனது உடலம் எரிக்கப்பட்டதா? அல்லது வெறுமனே புதைக்கப்பட்டதா?, .......? அவரது கேள்விகள் நீண்டு கொண்டே போகின்றன.

"நான் இப்போது எனது மகன்கள் இருவரினதும் விடயத்தை வெளிப்படுத்துவது ஏனென்றால் எனக்கு நீதி வேண்டும்.... ஆனால் அது எப்போதாவது கிடைக்குமா? என்றுதான் தெரியவில்லை என கே.ஜி. கமலாவதி தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மாத்தளைப் புதைகுழியின் பிணங்களின் காலம் தொடர்பாக இன்னும் சந்தேகமே நிலவுவதாகத் தெரிவித்துள்ளார். எனவே அச்சந்தேகத்தைத் தீர்க்க முன் எவ்வித கருத்துக்களையும் வெளியிட முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

மாத்தளைப் புதைகுழி பேசத்தொடங்கிவிட்டது. புதைகுழியைப் புதைக்காதவரை அது பேசப்போகும் உண்மைகளை யாரால் தாங்கமுடியும் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்துப் பாடத்திலும் அதி விசேட சித்திகள்..

சுகிதா ஐந்து அதிவிசேட சித்திகளையும் பெற்றுக்கொண்டுள்ள்னர்.

மாணவி சப்தவி தனது பெறுபேற்றுக்கான கல்வி முறை பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் நாளாந்தம் திட்டமிட்டமுறையில் நேரசூசிகைக்-கேற்பக் கல்வி கற்றுவந்ததாலேயே தன்னால் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்திகளைப் பெற முடிந்ததாகத் தெரிவித்தார்.


வினுசிதா


விதுசனா

மலைமுரசின் அலுவலகத்திற்கு ஆசிரியர் திரு. தவசிதனால் அழைத்துவரப்பட்டிருந்த இம் மாணவிகளுடன் அளவலாவிய போது அனைத்து ஆசிரியர்களும் தமது பெற்றோர்களும் தமது அதிபருக்கும் இவர்கள் தமது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டதுடன் விசேடமாகத் தமது பாடசாலையை விட்டு வெளியேறியிருந்தாலும் தமக்கு கணிதம் கற்பித்த ஆசிரியை விஜயா அவர்களுக்கும் தற்போது ஆசிரியர்களாகவுள்ள திரு.ஜெகதீசன் மற்றும் திரு கார்த்திக் ஆகியோருக்குத் தமது விசேட நன்றிகள் உரித்தாகவேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர். இவர்களுக்கான வாழ்த்துச் செய்திகளை சாம்பல்த்தீவு கிராம அபிவிருத்திச் சங்கமும், நாமகள் சனசமூக நிலையமும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.


சுகிதா

## எமது சக இனத்தவர் துன்பப்படுவது..

விடப்பட்டுள்ளன. இதனால் இன்று இந் நாட்டு முஸ்லிம்கள் பயத்துடன் வாழ்கிறார்கள். அவர்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்பற்ற நிலையை, கவலையை, பயத்தை அவர்களின் சக இனத்தவரான தமிழர்கள் நாமும் வேதனையுடன் உணர்கின்றோம்.'' என த.தே.கூ தலைவர் திரு. சம்பந்தன் பாராளுமன்ற சபாநாயகருக்கு தெரியப்படுத்தி-யுள்ளார்.

நாம் முஸ்லிம்களுடன் இலகுவில் பிரிக்க முடியாத மொழிப் பிணைப்பைக் கொண்டுள்ளோம். அவர்களைத் தெருக்களில் தாக்குவது, அவர்களது பள்ளிவாயில்களை..

உடைப்பது போன்ற நடவடிக்கைகளை கவலையற்ற பார்வையாளர்களாக இருக்கத் தமிழர்களாகிய எம்மால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

கனம் சபாநாயகர் அவர்களே! தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்ற முறையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் இன்றே நிறுத்தப்பட வேண்டும் என நான் உரிமையுடன் கோருகின்றேன்.

## சம்பூர் பிரதேச மக்களின்..

ஆனாலும் இன்று வரை அந்த மக்களின் உண்மையான பிரச்சனைக்கு நடைமுறை சாத்தியமான தீர்வுகள் குறித்து ஆராயப்படவில்லை என்பதே உண்மை.

எனவே இப்பிரச்சனை குறித்து உரிய தரப்பினர் அனைவருடனும் கலந்துரையாடி அம் மக்களுக்கு அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை பெற்றுக்கொடுக்க மாகாணத்தின் அமைச்சரவை ஊடாக முன் முயற்சியை நான் ஆரம்பிக்க விரும்புகின்றேன்'' என்றார்.

## ஆயுர்வேத வைத்தியர்களின் சேவைக் காலத்தை நீடிக்க கிழக்கு மாகாண அமைச்சரவை அங்கீகாரம்

கிழக்கு மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் வைத்தியர்களின் சேவைக் காலத்தை நீடிப்பதற்கு மாகாண அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. மாகாண சுகாதார அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை ஏற்றுக் கொண்ட அமைச்சரவை சேவைக்காலத்தை நீடிப்பதற்கான அனுமதியை வழங்கியுள்ளது கப்பல்துறை, மகாஓயா, நாவலடி, நிந்தவூர், ஏறாவூர், புதுக்குடியிருப்பு, பதவிசிறிபுர மற்றும் கிண்ணியா ஆகிய ஆயுர்வேத வைத்தியசாலைகளிலும் கிளிவெட்டி மற்றும் பதியத்தலாவ ஆகிய கிராமிய வைத்தியசாலைகளிலும் ஒப்பந்த அடிப்படையில் கடமைபுரியும் வைத்தியர்களின் சேவைக் காலமே மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்படவுள்ளது.

## மின்உற்பத்தியைக் குறைக்க..

மூடப்பட்டுக் கிடந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பெற்றோலியத் தொழிற்துறை அமைச்சினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட காசுக் கட்டுப்பாடுகளைத் தொடர்ந்தே இ.மி.ச இந் நிலைமையினை எதிர்கொள்வதாக மேலும் அவர் தெரிவித்தார். இ.மி.ச தனது கடன் நிலுவைகளை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தத் தொடங்கியுள்ளதைக் கணக்கிலெடுக்காமல் இ.மி.ச. விற்குக் கடன் கட்டுப்பாட்டு வாய்ப்பைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அளிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். மின்சாரசபையின் மின் உற்பத்தி குறைவடைவதால் எழும் இடைவெளியினை நிரப்புவதற்கு தனியார் துறையினரிடமிருந்து மின்னைக் கடனாகப் பெறும் நிலைக்கு தாம் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கடந்தவாரம் 36 பில்லியன் ரூபாய்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தியுள்ள நாம் இவ்வருடத்தில் தற்போதுவரை 4 பில்லியன் ரூபாய்களை செலுத்தியுள்ளோம் எனவும் பொதுப்பாவனைக் குழுவிடம் மின்சாரசபையால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டண அதிகரிப்பு முன்மொழிவுகள் தொடர்பாக தற்போதுவரை தீர்மானங்கள் எதனையும் தாம் பெற்றுக்கொள்ளா-திருப்பதாலேயே தமக்கு இக் கடினமான சூழல் எழுந்துள்ளதாகத் தெரிவித்த அவர் எதிர்வரும் புத்தாண்டிற்குப் பின்னரே பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவால் புதிய கட்டணங்கள் அறிமுகப்படுத்தப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச கண்ணிவெடி செயற்பாட்டு தினக் கொண்டாட்டம் சேனையூர் மத்திய கல்லூரியில்

சர்வதேச கண்ணிவெடி செயற்பாட்டு தினமானது தி.மூ.சேனையூர் மத்திய கல்லூரியில் கண்ணிவெடி தொடர்பான பதாதைகள், சுவரொட்டிகள் ,மாதிரி படங்கள் மற்றும் புத்தகங்கள் ஆகியவற்றுடனான கண்காட்சியும் கண்ணிவெடி அனர்த்தத்தினால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றிய நாடகம், நடனம் மற்றும் கவிதை, கண்ணிவெடி தினம் பற்றிய சிறப்புரைகளும் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்தந்தை ஜி.நிதிதாசன் அவர்களும் யுனிசெப் கண்ணிவெடி திட்ட உத்தியோகத்தர் திருமதி ரி. யதார்த்தனி அவர்களும், உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு ஹாஜாமுகைதீன் அவர்களும், சேனையூர் மத்திய கல்லுரி அதிபர் திரு இரத்தினசிங்கம், சம்பூர் மகா வித்தியாலய அதிபர் திரு பாக்கீஸ்வரன், சூடைக்குடா பாரதி வித்தியாலய அதிபர் திரு தி.கிருபதாஸ், முருகன் வித்தியாலய அதிபர் திரு ம.சச்சிதானந்தம், எகெட் கரித்தாஸ் திட்ட உத்தியோகத்தர் திரு மரியநாயகம் ஆகியோரும் மற்றும் சம்பூர் மகா வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும், சேனையூர் மத்திய கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் ,கட்டைபறிச்சான் நலன்புரிநிலைய மக்களும் கலந்து சிறப்பித்தனர்

(ஏ.டபிள்யூ. இர்பான்)



## மிளிரும் வாழைப்பழம்..

### "மஞ்சள் மிளிரும் வாழைப்பழம்" எச்சரிக்கை!

தேசிய வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தேசிய இணைப்பாளர் ‘‘மஞ்சள் நிறம் மிளிரும் வாழைப்பழங்கள் பாவணைக்கு உகந்தனவையா” என அவதானித்து வாங்குமாறு மக்களை நோக்கிக் கோரிக்கை விட்டுள்ளார். வாழைப்-பழத்தை பழுக்க வைத்துப் பாவிக்கப்-படுவதாக குற்றஞ்சாட்டடிய அவர் “பழ வியாபாரிகள் பழத்தின் நிறத்தையும் பேணுவதற்கு இரசாயனப் பொருட்களை பாவிப்பதாக தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பாவிக்கும் இரசாயணப் பொருட்களால் வாழைப்பழத்தின் மஞ்சள் நிறம் மிளிர்வதாகவும், அவ்வாறு மிளிரும் மஞ்சள் நிற வாழைப்பழங்களை வாங்கும்போது கூடியளவு அவதானம் எடுக்கும்படியும் அவர் கோரியுள்ளார்.

## சமயங்களிடையே சகவாழ்வுச் செயலமர்வு

சமயங்களுக்கிடையிலான சகவாழ்வு மற்றும் புரிந்துணர்வு என்பவற்றை மேம்படுத்தும் பொருட்டு ஒழுங்கு செய்யப்பட்ட செயலமர்-வொன்று அண்மையில் கிண்ணியா அல் இர்பான் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட சமயங்களின் செயற்பாட்டு ஒன்றியத்-தினால் தெரிவு செய்யப்பட்ட மூவின பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வை சகாவா மற்றும் சேவா லங்கா என்பன அனுசரை வழங்யிருந்தன. இந் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட சமயங்களின் செயற்பாட்டு ஒன்றியத் தலைவர் ஆர். பத்மநாகு குருக்கள் தலைமையில் ஒன்றியத்தின் பொருளாளர் மஹிந்தவசை தேரர் உறுப்பினர்களான அருட்தந்தை சூரியகுமார், மௌலவி எம்.வை. ஹாதியுல்லா ஆகியோர் கலந்து-கொண்டிருந்தனர்.

## இரத்தம் வழங்கினார்கள் இளைஞர்கள்



கிண்ணியர் தள வைத்திய-சாலையில் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள இரத்தத் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு கடந்த ஞாயிற்றுக்-கிழமை கிண்ணியா தள வைத்திய-சாலையில் இரத்ததான நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது.

இவ் இரத்ததான முகாமில் பெருந்தொகையான இளைஞர்கள் கலந்துகொண்டு இரத்ததானம் செய்திருந்தமையை காணக்கூடியதாக இருந்தது. இந் நிகழ்வை கிண்ணியன் தொண்டு நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.

## தென்னாசிய அமைதிக்கு..

தென்ஆசியப் பிரதேசத்தின் சுமூகமான நிலைக்கு இலங்கை நல்லிணக்கம் நோக்கி நகருதல் அவசியமானது என பசுபிக் பிராந்தியத்திற்கான அமெரிக்கக் கட்டளைத் தளபதி அட்மிரல் சாமுவேல் ஜே. லொக்லியர் தெரிவித்துள்ளார். ஆயுதப்படைக் கட்டளைப் பீடத்தில் தனது உரையை அவர் நிகழ்த்தும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முப்பதாண்டுகாலப் போரினால் பிரிந்துள்ள சமூகங்களை இணைத்தெடுக்கும் முயற்சியில் இலங்கை முழு மனதுடன் ஈடுபட வேண்டும் எனத் தெரிவித்துள்ள அவர் தென்னாசியாவின் மற்றைய நாடுகளுக்குள் இந்தியாவும் பாகிஸ்தானும் தம்மிடையேயான புரிந்துணர்வை மெதுவாகக் கட்டியெழுப்ப முயற்சித்து வருகின்றன எனவும் எனினும் சீனாவுடனான எல்லைப் பிரச்சனையை இந்தியா தீர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## பொன் மொழிகள்

- நீங்கள் ஏழையாக பிறந்தால் அது உங்கள் குற்றமல்ல.. ஆனால் ஏழையாகவே இறந்தால் அது உங்கள் குற்றம்தான் - *பில்கேட்ஸ்.*
- நீங்கள் எந்த பிரச்சினையையுமே சந்திக்காமல் அமைதியாக சென்று கொண்டிருந்தால், உங்கள் வாழ்க்கையில் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம் - *சுவாமி விவேகானந்தர்.*
- வெற்றி பெற மூன்று வழிகள் ஒன்று.. மற்றவர்களை விட அதிகமாக தெரிந்து கொள்ளுங்கள். இரண்டு.. மற்றவர்களை விட அதிகமாக பணியாற்றுங்கள் மூன்று... மற்றவர்களை விட குறைவாக எதிர்பாருங்கள். -*வில்லியம்ஸ் ஷேக்ஸ்பியர்.*
- நீங்கள் வெற்றி பெற்றால் அதைப் பற்றி யாருக்கும் விளக்க வேண்டியது இல்லை. ஆனால் நீங்கள் தோலவி அடைந்தால், அதை பற்றி விளக்க அங்கே நீங்கள் இருக்கக் கூடாது. - *அடல்ப் ஹிட்லர்*
- உங்களோடு நீங்கள் யாரையும் ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள். அப்படி நீங்கள் செய்தால்,உங்களையே நீங்கள் இழிவுபடுத்திக் கொள்வதாக அர்த்தமாகும். - *அலென் ஸ்டிரைக்*

## புத்திசாலி நரியார்

ஒரு கிராமத்தில் ஓர் கழுதை வாழ்ந்து வந்தது. அக்கழுதை நன்றாக உண்டு கொழு கொழு என்றிருந்தது. ஆஹா! வெயில் காலம் ஆரம்பமாகியது. அக்கழுதையாருக்கு உணவு தட்டுப்பாடு ஆரம்பமாகி மிகவும் மெலிந்து உணவுக்காக எங்கெல்லாமோ அலைந்து திரிந்தது. பயனில்லை அக்கழுதைக்கு உணவு கிடைக்கவேயில்லை. என்ன செய்வதென்று விளங்காமல் அலை மோதியது. இவ்வாறிருக்கையில் ஒரு நாள் அவ்வழியால் ஓர் நரி வந்தது. கழுதையின் பாவமான நிலையினை பார்த்து மிகவும் பரிதாபத்துடன் அருகில் வந்து "என்ன கழுதையாரே ஏன் இவ்வளவு சோகமாக காணப்படுகிறீர்?" என கேட்டது. கழுதையும் "என்னால் பசி தாங்கமுடியாது உள்ளது. சாப்பிட்டு நான்கைந்து நாட்களாகி விட்டது. இங்கிருக்கும் காய்ந்த புட்களை இதற்கு மேலும் என்னால் உண்ண முடியாது. எனக்கு ஏதேனும் உபாயம் கூறுவீரா!" எனக் கேட்டது. அதற்கு நரியாரோ "நானும் உணவு தேடித்தான் செல்கின்றேன். எனக்கு ஓர் சோளத்தோட்டம் தெரியும். நீ என்னுடன் வந்தால் கூட்டிச் செல்கின்றேன்." என்றது. கழுதையும் நரியுடன் செல்ல சம்மதித்து அதனுடன் சென்றது. சிறிது தூரம் சென்ற பின் மஞ்சள் மஞ்சளாக காய்த்துத் தொங்கிய சோளத் தோட்டத்தை இருவரும் கண்டனர். கழுதையாருக்கு வாய் ஊறத்தொடங்கியது. இருவரும் ஓட்டமும் நடையுமாகச் சென்று அவ்விடத்தை அடைந்தனர். ஒருவாறு வேலியினூடாக புகுந்து சென்று உண்ணத் தொடங்கினர். இருவரும் கழுத்து வரை உண்ட பின்னரே பெருமூச்சு விட்டனர். வயிறு நிறைய சாப்பிட்ட திருப்தியில் கழுதை சற்று நேரம் படுத்துக் கொண்டது. நிறைய நாட்களுக்கு பின் நல்ல சாப்பாடு கிடைத்ததையிட்டு தன் சந்தோசத்தை வெளிக்காட்ட நரி ஊளையிடத் தொடங்கியது. ஊளைச் சத்தத்தைக் கேட்டு திடுக்கிட்டெழுந்த கழுதை, "அய்யய்யோ நரியாரே ஊளையிடுவதை சற்று நிறுத்துங்கள். ஊளைச் சத்தம் கேட்டு தோட்டக்காரர் வந்துவிடப்போரார். ஐயோ தயவு செய்து நிறுத்துங்கள்" என்று எவ்வளவோ கூறியும் நரியால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. நரியோ ஊளையிட்டுக் கொண்டேயிருந்தது. ஊளையிடும் சத்தத்தைக் கேட்ட தோட்டக்காரர் பெரிய தடி மற்றும் கல்லுடன் ஓடி வந்தார். உடனடியாக கழுதையார் தோட்டத்தை விட்டு ஓடத்தொடங்கியது. நிலைமையை புரிந்து கொண்ட நரியாரும் கழுதையாருக்குப் பின்னே ஓடிச் சென்றது. ஓடி வந்த தோட்டக்காரர் எறிந்த கல் கழுதையின் முதுகை பதம் பார்த்தது. அதையும் பொறுத்துக் கொண்டு ஓடியது கழுதை. அதைத் தொடர்ந்து நரியும் ஓடி வந்தது. இருவரும் சற்றுத் தூரம் சென்ற பின் நின்று இளைப்பாறினர். அப்பொழுது நரி தான் செய்த தவறை புரிந்து மன்னிப்புக் கேட்டது. இருந்தாலும் அடியின் வலி கழுதையை மன்னிக்க விடவில்லை. ஒரு சிறு புன்னகையுடன் பயணத்தை தொடருவோம் என்று சைகை செய்து முன்னேறிச் சென்றது. சென்றுகொண்டிருந்த வழியில் ஓர் நீரோடை வந்தது .அதைக்கடக்க நரியார் கழுதையிடம் உதவி கேட்டார். இதுவே நரியைப் பலிவாங்கக் கிடைத்த சந்தர்ப்பம் என மனதிற்குள் எண்ணிய கழுதையார் நரியாரை தனது முதுகில் ஏறி அமருமாறு கூறி அந்நீரோடையைக் கடக்கத் தொடங்கினார். நரி கழுதையிடம் கூறியது "என்னால் உங்களுக்கு முதுகில் நன்றாக அடிபட்டது. இருந்தாலும் காய்ந்து வாடிக் கிடந்த உங்களுக்கு நல்ல உணவைப் பெற்றுத் தந்தேன் என்கின்ற ஒரே காரணத்திற்காக என்னைப் பலிவாங்காமல் இந்நீரோடையைக் கடக்க உதவி செய்கிறீர்களே! உங்களுக்கு மிகவும் நன்றி. உங்கள் உதவியை என்றென்றும் மறக்க மாட்டேன்" எனக் கூறியது. நரியாரின் தந்திரத்தை விளங்கிக் கொள்ளாத கழுதையார் கவனமாக அந்நீரோடையைக் கடந்து நரியாரை எதிர்க்கரையில் இறக்கி விட்டது. தான் செய்யவிருந்த தவறை எண்ணி மிகவும் கலக்கமடைந்து வெட்கித் தலைகுனிந்தது கழுதை.





## அழகுக் குறிப்புகள்..

- தேங்காய் எண்ணெயில் மஞ்சள்தூளை போட்டுக் குழைத்து உடம்பிற்கு தடவி, பயத்தமாவை தேய்த்துக் குளித்தாள் தோல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.
- ஆரஞ்சு பழத்தை இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து, பத்து நிமிடம் கழித்து சோப்பு போட்டு கழுவ வேண்டும். தினம் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளப்பாகவும், இளமையுடனும் இருக்கும்.
- முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க அடிக்கடி எலுமிச்சை சாற்றை தடவ வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழகு பெறும்.
- பருமனாக இருப்பவர்கள் எடையை குறைக்க தினமும் காலையில் ஒரு டம்ளர் வெதுவெதுப்பான வெந்நீரில் ஒரு மூடி எலுமிச்சை பழச்சாற்றை பிழிந்து அதனுடன் அரை ஸ்பூன் தேன் கலந்து சாப்பிட்டால் எடை குறையும்.
- நகங்களை வெட்டும் முன் எண்ணெயை தடவிவிட்டு, சிறிது நேரம் கழித்து நகத்தை வெட்டினால், விரும்பும் வடிவத்திலும், அழகாகவும் வெட்ட இயலும்.
- கூந்தலில் எண்ணெய் பசை அதிகமாக இருந்தால், கோழி முட்டையில் கொஞ்சம் சர்க்கரையை கலந்து தலையில் லேசாக தடவிக்கொண்டு பிறகு தலைக்கு ஊற்ற வேண்டும். இதனால் எண்ணெய் பசை நீங்கி முடி அழகு பெறும்.
- தேநீரில் வடிகட்டிய பின், மிஞ்சும் தேயிலைத் தூளில் எலுமிச்சை சாறை பிழிந்து, தலையில் தேய்த்துக் குளித்தால், தலைமுடி பளபளப்பாகும்.
- வேப்பிலை, புதினா, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலைகளை காயவைத்து, தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குழைத்து, முகத்தில் பூசி, 20 நிமிடம் ஊற வைத்து குளித்தால், முகம் வேவோடிக்குரு வராமல், வெளியில் கறுத்துப் போகாமல் இருக்கும்.
- இளம் சூடான ஒரு லிட்டர் நீரில், இரண்டு ஸ்பூன் உப்பைப் போட்டு, கண்களை கழுவினால் கண்கள் பிரகாசமாக இருக்கும்.
- கை, கால் முட்டிகளில் கறுப்பு நிறம் அதிகமாக இருந்தால், தொடர்ந்து அந்த இடத்தில் எலுமிச்சம்பழ சாற்றை தேய்த்து சோப்பு போட்டு குளிக்க வேண்டும் நாளடைவில் கறுப்பு நிறம் போய் விடும். தோல் வறண்டும், சுருக்கமும் இருந்தால் ஆலிவ் ஆயிலைப் பூசி, சிறிது நேரம் ஊற வைத்து, சோப்பு போட்டு குளிக்க வேண்டும்.
- இரவு படுக்கும் முன், புதினா சாறு இரண்டு தேக்கரண்டி, அரை மூடி எலுமிச்சம்பழ சாறு ஆகியவற்றுடன் பயிற்றம்பருப்பு மாவை கலந்து முகத்தில் தடவிக் கொண்டு பத்து நிமிடம் ஊறிய பிறகு ஐஸ் ஒத்தடம் கொடுக்க முகம் சுத்தமாகும். பருவினால் ஏற்பட்ட தழும்பும் மறையும்.
- ஆப்பிள் பழத்தை சின்னச் சின்ன துண்டுகளாக வெட்டி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணைப் பசை குறையும்.
- முகத்தில் உள்ள முடிகளை அகற்ற, முட்டையின் வெள்ளை கரு, சர்க்கரை, சோளமாவு அனைத்தையும் ஒன்றாகக் கலந்து பசைபோல் ஆனதும் முகத்தில் தடவவும். காய்ந்தவுடன் மெதுவாக பிய்த்து எடுத்தால் முட்டையுடன் முடியும் எளிதில் வரும்.
- மோரை முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து முகத்தைக் கழுவினால் வறண்ட சருமம் புதுப் பொலிவடையும்.
- பழுத்த வாழைப் பழத்தை நன்றாகப் பிசைந்து முகத்தில் தடவி, 20 நிமிடம் கழித்து கழுவினால், சருமம் மிகவும் மிருதுவாகும்.
- ஆரஞ்சு பழத்தோலை வெயிலில் காயவைத்து பொடி செய்து பாலுடன் கலந்து சருமத்தில் தடவி அரைமணி நேரம் கழித்து கழுவி வந்தால், வெயிலில் ஏற்பட்ட கருமை மறையும்.
- பால், கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும்.
- தேங்காய்ப் பாலுடன் ஒரு டீஸ்பூன் தேன் கலந்து முகத்தில் ஐந்து நிமிடம் மசாஜ் செய்தால் சோர்வடைந்து சருமம் புத்துணர்ச்சி பெறும்.
- தக்காளி பழத்தை இரண்டாக நறுக்கி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணைப் பசை குறையும்.
- தோல் வறண்டும், சுருக்கமும் இருந்தால் ஆலிவ் ஆயிலைப் பூசி, சிறிது நேரம் ஊற வைத்து, சோப்பு போட்டு குளிக்க வேண்டும்.

## சோயா ரொட்டி

*தேவையான பொருட்கள் :*
சோயாமா - அரை சுண்டு, புழுங்கலரிசிமா - கால் சுண்டு, கடலை மா - கால் சுண்டு, கரட் - 100 கிராம், லீக்ஸ் - 100 கிராம், சிறிதாக வெட்டிய பச்சைமிளகாய் - 2 மே.க, உப்புத்தூள் - அளவிற்கு, மிளகுத்தூள் - அளவிற்கு, நெய் - 2 மே.க, தண்ணீர் - அளவிற்கு

*செய்முறை :*
கரட்டைத் துப்பரவு செய்து ஸ்கிறேப்பரில் துருவியெடுத்துக் கொள்ளவும். லீக்ஸை துப்பரவு செய்து சிறுசிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். பின்னர் சோயா மா, புழுங்கலரிசி மா, கடலை மா என்பவற்றை அரித்துப் பாத்திரத்திலிட்டு வெட்டிய கரட், லீக்ஸ், பச்சைமிளகாய், உப்புத்தூள், மிளகுத்தூள், நெய் என்பன இட்டு நன்கு கலந்து கொண்ட பின்பு தண்ணீரை அளவிற்கு விட்டு ரொட்டி மாப்பதத்திற்குக் குழைத்துப் பின் ரொட்டி மாவைத் தட்டுவது போல் தட்டி எண்ணெய் பூசிய தோசைக்கல்லில் இட்டு வாட்டியெடுக்கவும்.



## அம்புல் மாலு [மீன் சாடி]

*தேவையான பொருட்கள் :*
சூரன் மீன் - அரை கிலோ, கொறக்காய் - 25 கிராம், மிளகு - 1 மே.க, உப்புத்தூள் அளவிற்கு, மஞ்சள் தூள் - 1 தே.க, கடுகு - 1 தே.க

*செய்முறை :*
சூரன் மீனைத் துப்பரவு செய்து கழுவி சிறு சிறு துண்டுகளாக வெட்டி மஞ்சள்த்தூள் சேர்த்து புரட்டி வைக்கவும் பின் கொறக்காயைக் கழுவி 1மணி நேரத்திற்கு ஊறவைக்கவும். பின்பு ஊற வைத்த கொறக்காய், மிளகு, கடுகு, என்பவற்றை ஒன்றாகச் சேர்த்து அளவாக நீர்விட்டுப் பசுந்தையாக அரைத்த கூட்டை எடுத்த பின் 1 தம்ளர் தண்ணீர் விட்டு கழுவிய நீரையும் எடுத்துக் கொள்ளவும். அதன் பின்னர் மீனை மண்சட்டியிலிட்டு அரைத்த கூட்டையும், கழுவிய தண்ணீரையும் விட்டு உப்பு உப்பு அளவிற்குச் சேர்த்து அடுப்பில் வைத்துக் கொதிக்க வைக்கவும். மீன் நன்றாக அவிந்து நீர்த்தன்மை சுண்டத் தொடங்கியதும் இறக்கி ஆறவைத்து தொற்று நீக்கிய போத்தலில் அடைத்து வைத்து இரண்டு வாரம் வரை பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

### மத்தள விமானத் தளத்தில் பறவைகளையும் மிருகங்களையும் கலைக்க நடவடிக்கை

மத்தள விமான தளத்தில் பறந்திறங்கும் விமானங்களுக்கு அங்குள்ள பறவைகளும் ஏனைய காடுசார் உயிரினங்களும் பெரும் ஆபத்தை விளைவிப்பதால் அவற்றை அபிபரதேசத்திலிருந்து அகற்றும் நடவடிக்கைகளை குடிசார் வான்சேவை அதிகாரசபை ஆரம்பித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக மத்தள விமானநிலையத்தையும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களிலும் மூடப்படாமல் காணப்படும் நீர் நிலைகளை மூடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் உணவை வழங்கும் பற்றைகளை அழிக்கும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது விமானங்கள் வந்திறங்கும் போதும் மேலேழும்பும் போதும் வான வெடிகளையும் வண்ண மத்தாப்புக்களையும் கொழுத்தி பறப்பனவற்றையும் ஓடுவனவற்றையும் கலைக்கும் செயற்பாடுகளை விமானநிலையம் மேற்கொண்டுள்ளது.

### சென்னைக்கு விசா வழங்கக் கால தாமதம் இலங்கை தூதரின்பயணம் பிந்தியது

இந்தியாவின் தமிழ்நாட்டுத் தூதுவராலயத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள இலங்கையின் புதிய பிரதித் தூதுவருக்கான விசாவை வழங்காது இந்தியா இழுத்தடிப்பதால் அவரால் அங்கு தனது கடமைகளை குறித்த நேரத்தில் ஏற்றுக்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் பிரதித்தூதராக நியமனம் பெற்ற சபருள்ளாஹ் கான் அவர்களின் விசா விண்ணப்பமே கிடப்பில் போடப்பட்டுள்ளது.

இவரது நியமனத்தை இந்திய அரசு தற்போதுவரை ஏற்றுக்கொள்ளது இருப்பதாலேயே தற்போதுவரை விசா வழங்க்ப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இவ்வாறானதொரு இழுத்தடிப்பினை முன்னெப்போதுமே தாம் இந்திய அரசிடமிருந்து எதிர்கொண்டதில்லை என இலங்கை வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

தருவார்களா தரமாட்டார்களா என்பதைக் கூட புதுடெல்லி தமக்குத் தெரியப்படுத்த வில்லை என அத்துறை மேலும் தெரிவித்துள்ளது.

### சட்டவிரோதக் கடற்பயணிகளை கைது செய்தது இந்திய கடற்காவற்படை

தமிழ்நாட்டில் அகதிகளாக இருந்த இலங்கைத் தமிழர்கள் அங்கிருந்து கடல்வழியாக அவுஸ்திரேலியாவிற்குத் தப்பிச் செல்லும் முயற்சியில் ஈடுபட்ட போது கைது செய்யப்பட்டுள்ள்தாக தெரியவருகின்றது. இந்தியக் கடலோரக் காவற்படையால் சுமா நூற்றியிருபது இலங்கைத் தமிழரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக தற்காலிக பிரதித் தூதர் அமிர் அஜ்வாட் தெரிவித்துள்ளார்.

தென்காசழ மற்றும் கடையநல்லூர்ப் பிரதேசங்களில் இருந்து வந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள்தாகவும் அவர்களில் பெண்களும் குழந்தைகளும் இருப்பதாகவும் தெரிவித்துள்ள அவர் அதிகாரபூர்வமான தகவல்களின் பின்னரே தம்மால் அவர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ள முகாமிற்குப் போக முடியும் என்பதையும் தெரிவித்துள்ளார்.

## The Sunday Observer:

### மாத்தளை மனிதஎச்சங்கள் தொடர்பான விசாரணைக்கு விமல் வேண்டுகோள்

1988/ 89 களில் உள்நாட்டு கலவரத்தின் போது கொன்று புதைக்கப்பட்டதாக தற்போது வரை கருதப்படும் மாத்தளை மனித எச்சங்கள் தொடர்பாக முழு அளவிலான விசாரணையை நடத்த வேண்டும் என அமைச்சர் விமல் வீரவன்ச அரசிடம் கோரியுள்ளார். மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசாங்கம் நம்பத்தகு விசாரணையை மேற்கொள்ள வேண்டும் எனக் ேகோரும் ஐக்கிய நாடுகள் சபை அதே போன்றதொரு நம்பத்தகு விசாரணையை ஐ.நா வின் மனித உரிமைச் சபை ஏன் மாத்தளை புதைகுழிகள் சார்பாக மேற்கொள்ளக்கூடாது என வீரவன்ச மேலும் கேள்வி எழுப்பினார். மேலும் மனித உரிமை ஆணையர் நவநீதம் பிள்ளையும் அமெரிக்க சனாதிபதி ஒபாமாவும் மாத்தளை மனிதப் புதைகுழியினை ஏன் மனித உரிமை மீறல்களாகக் கருதவில்லை எனவும் அவர் கேள்வி எழுப்பினார். "இக்கொலைகள் ஐ.தே. கட்சியின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்துள்ளதால் அமெரிக்காவும் ஐ.நாவும் அவ் ஆட்சி தமது ஆசியைப் பெற்றிருந்ததால் இம் மாத்தளை கொலைகளை மனிதஉரிமை மீறல்களாக பார்க்க மறுக்கின்றார்களா" என்றும் அவர் கேள்வி எழுப்பினார். ஜே.வி.பி யினால் உடனடி விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அங்கீகரித்த விமல் அமெரிக்காவுக்கு எதிரான தலைவர் ஒருவர் பயங்கரவாதத்திற்கெதிரான போரொன்றை நடத்தி வெற்றி கொண்டு சமாதானத்தை நிலைநாட்டியிருந்தாலும் அந்நாட்டின் மீதும், அத்தலைவரின் மீதும் பல்வேறு வகையான குற்றச்சாட்டுக்களையும் மனித உரிமை-மீறல்களையும் சுமத்துவதற்கு அவ் அரசுகள் தயங்குவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

### தமிழ் நாட்டின் அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள் உள்நாட்டில் எதிர்வினையையே ஏற்படுத்துகிறது – ஆனந்தசங்கரி –

தமிழ் நாட்டின் மாணவர்களைப் பயன்படுத்தி இலங்கைக்கெதிராக ஆர்ப்பாட்டங்களை தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் முன்னெடுப்பதால் உள்ளூர்த்தமிழர்களின் நலன்களின் மீது அவை எதிர்வினையையே ஏற்படுத்துகின்றது என தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்த சங்கரி தெரிவித்தார். தமது அரசியல் நலன்களுக்காக போராட்டங்களை முன்னெடுக்கும் தமிழ்நாட்டு அரசியல் வாதிகள் உள்ளூரின் உண்மை நிலையினை உணர்ந்து கொள்ள ஏனோ மறந்துவிட்டார்கள் என அவர் தெரிவித்தார். மு.கருணாநிதி, ஜெயலலிதா, வை.கோபாலசாமி, நெடுமாறன் போன்றோரே எதிர்வரும் ஆண்டில் நிகழவிருக்கின்ற இந்தியத் தேரிதல்களுக்காக ஈழத்தமிழர்களின் பிரச்சனையை சாதகமாக பயன்படுத்த முனையும் முக்கிய அரசியல் தலைவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

### மீன்பிடி அனுமதிப்பத்திரம் நீக்கப்பட்டது

வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் கடந்த இரண்டு தசாப்தங்களாக நடைமுறையில் இருந்த மீன்பிடி அனுமதிப்பத்திர முறை இரு வாரங்களுக்கு முன் நீக்கப்பட்டுள்ளது. மீன்பிடி கடல்வள அபிவிருத்தி அமைச்சர் கலாநிதி ராஜித சேனாரத்ன இவ்விடயம் தொடர்பாக வெளிப்படுத்தியிருந்ததுடன் இத்திட்டத்தை நீக்க வேண்டும் என போர்க்கொடி தூக்கியிருந்த மீனவர்களுக்குக் கிடைத்த வெற்றியாகவே இதைக் கருத வேண்டும் என தெரிவித்தார். பாக்குநீரிணையூடாக புலிகளின் நடமாட்டத்தை அவதானிப்பதற்கு வசதியாகவே இம்மீன்பிடித் தடை கடந்த இரண்டு தசாப்தங்களாக அமுலில் இருந்தது. இந்திய மீனவர்களின் ஆழி அதுதுமிறல்களை தடுக்கும் வண்ணமாக தற்போது வடக்கு கிழக்கு கடற்பிரதேசத்தில் இலங்கை கடற்படை 10கடல் மைல் துாரம் வரை கண்காணிப்பு பயணங்களை மேற்கொண்டுள்ளது என்றும் தெரிவித்தார். இதனால் இந்திய மீன்பிடிப் படகுகளின் அத்துமீறல் குறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## The Leader

### அரசின் நடவடிக்கையை ஐ.நா கோருகிறது

கடத்தப்பட்டு காணாமற் போனவர்கள் தொடர்பாக நிலுவையிலுள்ள வழக்குகளை வேகமாக விசாரித்து முடிக்கும் நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. தன்னிச்சையற்று அல்லது கட்டாயத்தின் பேரில் கடத்தப்பட்டு காணாமற் போனோர் தொடர்பாக ஐ.நாவின் செயற்பாட்டுக் குழு கடந்தவாரம் மீளப்பிரசுரித்த தனது அறிக்கையிலேயே இவ்விடயத்தை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையின் படி 12473 வழக்குகள் தொடர்பாக இலங்கை அரசுடன் தொடர்பாடலை மேற்கொண்டிருந்ததாகவும் அவற்றுள் 40 வழக்குகள் தொடர்பான விசாரணைகள் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்தும் 6535 வழக்குகள் அரசிடமிருந்தும் பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் விசாரித்து முடிக்கப்பட்டுள்ளதாகவும் 222 வழக்குகள் ஏற்கனவே பதியப்பட்டிருந்ததால் அழிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ள அவ்வறிக்கை 5676 வழக்குகள் தற்போதும் நிலுவையில் இருப்பதாக தெரிவிக்கின்றது. இச்செயற்பாட்டுக் குழுவிலிருந்து 4 அவசரமான வழக்குகள் கடந்த வருடம் அரசிற்கு முன்னிலைப்படுத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது. அந்நான்கினுள் முதல் இரு வழக்குகளும் லலித் வீரராஜா மற்றும் குகன் முருகானந்தன் பற்றியதாகும். மூன்றாவது வழக்கு இந்திய பிறப்புரிமை கொண்ட இலங்கை வர்த்தகரான ராமசாமி பிரபாகரன் தொடர்பாகவும் நான்காவது வவுனியாவில் வைத்து குற்றப்புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டதாக கூறப்படும் வசந்தமாலா பத்மநாதன் தொடர்பான வழக்கும் உள்ளடங்குகிறது. எனினும் தற்போது வரை இந்நான்கு வழக்குகள் தொடர்பாகவும் எவ்வித விபரங்களையும் அரசு வழங்கவில்லை என்பது கவலைக்கிடமாகவுள்ளதாக செயற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.

### குடியுரிமைக்காக கெஞ்சப்போவதில்லை சரத்பொன்சேகா தெரிவிப்பு

கடந்த சனாதிபதித் தேரிதலின் பின் தன்னிடமிருந்து பறிக்கப்பட்ட குடியுரிமைகளை மீளப்பெற்றுக்கொள்வதற்காக சனாதிபதி மகிந்த ராசபக்சவிடம் கெஞ்சப் போவதில்லை என சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார். அரசாங்கமே இதைத் தரவேண்டுமேயொழிய நான் கேட்டு அவை எனக்கு கிடைக்கவேண்டியவையல்ல என அவர் தெரிவித்தார். தன்னிடமிருந்த எல்லாவற்றையும் சனாதிபதித் தேர்தலின் பின் அரசு பறித்துவிட்டதாக பொன்சேகா கூறியுள்ளார். முடியுமானால் தனது அனைத்து குடியுரிமைகளையும் தந்து எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் தனது கட்சியுடன் பலப்பரீட்சை செய்து பார்க்கலாம் என அவர் சவால் செய்துள்ளார்.


### மாத்தளைப் புதைகுழி தொடர்பாக விசாரணைகளை கோரும் ஐ.தே. கட்சி

மாத்தளை மனிதப்புதைகுழி தொடர்பான முழுமையான விசாரணையை மேற்கொள் வேண்டும் என ஐ.தே. கட்சி அரசினைக் கேட்டுள்ளது. 87 - 89 காலப்பகுதிகளில் சுட்டோ அல்லது வேறு விதமாகவோ கொல்லப்பட்ட பலரது சடலங்கள் இம்மாத்தளைப் புதைகுழியில் புதையுண்டு கிடப்பதாக ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது. தற்போது அதிகாரவாணையிலிருக்கும் அரசு இம்மனிதப் புதைகுழி சம்பந்தமான சந்தேகங்களைத் தீர்ப்பதற்கான விசாரணைகளை மேற்கொண்டு உண்மையினைக் கண்டுபிடிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

### கொரியாவிலிருந்து இலங்கையர் திருப்பியனுப்பப்படும் செய்திகள் எவையுமில்லை

தென்கொரியாவிலிருந்து இலங்கையர் எவரும் நாட்டுக்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் எவையும் தற்போது வரை வெளியாகவில்லை என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். தற்போது வரை அங்கு வேலை செய்யும் எவருக்கும் ஆபத்துக்கள் இல்லை. எனினும் எதிர்காலத்தில் ஆபத்துக்கள் ஏற்படுமாயின் அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## காய்ச்சலின் பின் விளையாட்டைத் தவிருங்கள்

### - சுகாதார அமைச்சு -

மரதன் போன்ற நீண்டதூர விளையாட்டுக்களில் காய்ச்சல் அல்லது வைரஸ் காய்ச்சலின் பின் ஈடுபட வேண்டாம் என பாடசாலைகளுக்கு தேசிய வைத்தியசாலை அதிகார ஆணையம் வேண்டுகோள் விடுத்துள்ளது. "தற்போது வைரஸ் காய்ச்சல் பரவி வருகின்றது. இவ்வைரஸ் காய்ச்சலின் பின் இதயத்தசைகளில் இறுக்கத்தை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்கள் அதிகமாகவிருக்கின்றது. இந்நோய்த் தொற்றுக்குள்ளாகுபவர்களில் சுமார் 1வீதமானவர்களே இவ்வாறு இதயத்தசைப்பிடிப்புக்கு உள்ளாவர். இவர்கள் நீண்ட தூர ஓட்டங்களில் ஈடுபடும் போது எதிர்பாரா மரண-வாய்ப்புக்கள் உள்ளது." என வைத்தியர் சிரில் சில்வா தெரிவித்துள்ளார்.

# வேல் சிறார் பள்ளியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள்

வேல் சிறுவர் பாடசாலையின் இரண்டாம் வருட விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை புனித சூசையப்பர் கல்லூரியின் விளையாட்டுத் திடலில் நடந்தேறியது. வேல் வர்த்தகக் கல்லூரியின் கீழ் இயங்கும் வேல் மொன்டிசரியின் இரண்டாவது வருட இல்ல விளையாட்டுப் போட்டிகள் அப் பள்ளியின் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

சிறார்களுக்கான தடகளப் போட்டிகளில் 30 மீற்றர் மற்றும் 25 மீற்றர் ஓட்டம், கயிறிழுத்தல், மூன்று வயதிற்குட்பட்ட சிறார்களுக்கான பால் அருந்ததல், வேக நடை போன்ற 20ற்கும் மேற்பட்ட தடகளப் போட்டிகள் நடை பெற்றன. அனைத்துச் சிறார்களும் பரிசில்களை வென்றது குறிப்பிடத்தக்கது.

இம் மெய்வல்லுனர் போட்டி களுக்குப் பிரதம விருந்தினராக புனித சூசையப்பர் கல்லூரியின் ஆண்டு 8ல் கல்விகற்கும் தடகள விளையாட்டு வீரன் மாணவன் அர்சாத் அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். போட்டிக்கான ஏற்பாடுகளில் திருமலை நகர இளஞ்சிங்கக் கழகத்தினர் (லியோ கழகம்) ஈடுபட்டிருந்ததுடன் போட்டிக்கு மத்தியத்தர்களாக முன்னாள் பாடசாலை மட்ட மாவட்டத் தடகள வீராங்கனை செல்வி மதுனிகா குமார் அவர்களும் அவரது இணை செல்வி அஜந்தா அவர்களும் அறிவிப்பாளராக ஜனனி அவர்களும் பணியாற்றியிருந்தனர்.

டொம் மற்றும் ஜெரி எனப் பிரிக்கப்பட்டிருந்த இரு இல்லங்களில் முன்பள்ளிச் சிறார்களுடன் பெற்றோரும் தடகளப் போட்டிகளில் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கலந்து சிறப்பித்த பெற்றோருக்கான போட்டிகளில் 100 மீற்றர் ஆடவர்க்கான போட்டிகளில் முதலிடத்தை திரு தினேஸ்ம் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் நிலூகா எதிரிசூரிய, கே.பி. றமணி உதயகாந்தி ஆகிய இருவரும் முதலிடத்தைப் பிடித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. உறியடிப் போட்டிகளில் ஆடவர் உறியடி மன்னனாக எஸ். சிவனேசன் மகளிர் உறியடி அரசிகளாக சி.யோகராணி ஆகியோர் பரிசில்களை வென்றிருந்தனர்.

இவ்விளையாட்டுப் போட்டிகளை பள்ளியின் நிர்வாகி பிரதீபா அவர்களும் ஆசிரியைகள் புத்திகா, சுபா, மற்றும் அபி ஆகியோரும் ஒழுங்குபடுத்தி-யிருந்தமை குறிப்பிடத்தக்கது.











## பட்டம் வென்றார் செரீனா

பேமிளி சர்கிள் கிண்ண டென்னிஸ் தொடரில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் சாம்பியன் பட்டம் வென்றார். அமெரிக்காவில் உள்ள சார்லஸ்டன் நகரில் மகளிருக்கான டபிள்யு.டி.ஏ. பேமிளி சர்கிள் கிண்ண டென்னிஸ் தொடர் நடைபெற்று வந்தது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், செர்பியாவின் ஜான்கோவிச்சை சந்தித்தார். இதன் முதல் செட்டை கோட்டை விட்டு பின்னர் சுதாரித்த செரினா 3-6, 6-0, 6-2 என்ற செட்களில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார். இரட்டையர் இறுதிச்சுற்றில் செக்குடியரசின் லூசி ஷபரோவா, பிரான்சின் கிறிஸ்டினா ஜோடி, அமெரிக்காவின் லீசெல், செக் குடியரசின் ஆண்டிரியா ஜோடியை 6-3, 7-6 என்ற செட்களில் வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது.

## அசைவூட்டப் (Animation) படத்தில் சச்சின்

இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் "மாஸ்டர் பிளாஸ்டர்'' என்ற அசைவூட்டல் திரைப்படத்தில் நடிக்க உள்ளார்.

மும்பையை சேர்ந்த தனியார் நிறுவனம் இந்த முப்பரிமான அசைவூட்டல் படத்தை தயாரிக்கிறது. இதன் நாயகனாகவே சச்சின் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதன்மூலம் குழந்தைகளின் துடுப்பாட்ட ஆர்வம் அதிகரிக்கும் என்றும் இப்படத்தில் நடிக்கத் தான் பெரும் ஆவலாக உள்ளதாகவும் சச்சின் தனது டுவிட்டர் இணையத்தளத்தில் கருத்து வெளியிட்டுள்ளார்

மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்கள் – திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.